# 1 தெசலோனிக்கேயர் 2

## நவீன மொழிபெயர்ப்பாளர்களின் பகுதிப்பகுதியான பிரிவுகள்

| USB4 | NKJV | NRSV | TEV | NJB |
|---|---|---|---|---|
| தெசலோனிகாவில் பவுலின் ஊழியம் | பவுலின் நடத்தை | பவுலின் வாழ்க்கை மற்றும் வேலை | தெசலோனிகாவில் பவுலின் பணி | தெசலோனிகாவில் பவுலின் உதாரணம் |
| 2:1-12 | 2:1-12 | 2:1-8 | 2:1-9 | 2:1-7a |
| | | | | 2:7b-12 |
| | | 2:9-12 | | |
| | | | 2:10-12 | |
| | அவர்களின் மனமாற்றம் | | | தெசலோனிக்கேயரின் விசுவாசம் மற்றும் பொறுமை |
| 2:13-16 | 2:13-16 | 2:13-16 | 2:13-16 | 2:13-16 |
| மீண்டும் சபைக்கு வருகைத்தர பவுலின் விருப்பம் | அவர்களைப் பார்க்க ஏங்குகிறார் | பவுலின் பாசம் தெசலோனிக்கேயர் | மீண்டும் வருகைத்தர பவுலின் விருப்பம் | பவுலின் கவலை |
| (2:17-3:13) | | (2:17-3:13) | (2:17-3:13) | |
| 2:1-20 | 2:17-20 | 2:17-20 | 2:17-20 | 2:17-20 |

**வாசிப்பு சுழற்சி 3** (சிறந்த வேத வாசிப்புக்கான வழிகாட்டலிலிருந்து)

*பந்திபந்தியான பிரிவுகளின் அடிப்படையில் எழுத்தாளரின் உண்மையான நோக்கத்தை அறிதல்*

இது ஒரு கற்றல் வழிகாட்டல் விளக்கவுரை. அதாவது, வேதாகமத்திற்குரிய உங்களுடைய தனிப்பட்ட பொருள் விளக்கத்துக்கு நீங்களே பொறுப்பாளர்கள். நம்மோடிருக்கும் வெளிச்சத்தோடு நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாக நடக்க வேண்டியது அவசியம். நீங்களும், வேதாகமமும் பரிசுத்த ஆவியும் பொருள்விளக்கத்துக்கு இன்றியமையாதவர்கள். நீங்கள் இதனை விளக்கவுரையாளருக்கு விட்டுவிட முடியாது.

முழு அதிகாரத்தையும் ஒரே அமர்வில் வாசிக்கவும். விடய பிரிவுகளை இனங்கண்டுக்கொள்ளுங்கள். மேற்கூறப்பட்ட ஐந்து மொழிப்பெயர்ப்புக்களுடனும் உங்களுடைய விடய பிரிவுகளை ஒப்பிட்டுப்பாருங்கள். பகுதிப்பகுதியான பிரிவுகளானது வெளிப்பாடாயில்லாவிட்டாலும் மொழிப்பெயர்ப்பின் ஆதாரமாகிய

எழுத்தாளருடைய நோக்கத்தினை புரிந்துக்கொண்டு பின்தொடருவதற்கான திறவுகோலாய் இருக்கிறது. ஒவ்வொரு பந்தியும் ஒரே ஒரு விடயத்திளை உள்ளடத்தியே காணப்படுகின்றது.

1. முதலாவது பந்தி
2. இரண்டாவது பந்தி
3. மூன்றாவது பந்தி
4. போன்றவை.

## சூழ்நிலை சம்பந்தமான ஆய்வு வசனங்கள் 1-13

A. இந்த அதிகாரம் தெசலோனிக்கேயாவில் சபைக்கு எதிராக வளர்ந்து வரும் யூத எதிர்ப்பை பிரதிபலிக்கிறது (ஒ.பா. அப்போஸ்தலர் 17:1-9).

B. இந்த அதிகாரம் ஒரு உண்மையான ஊழியரின் பண்புகளை அற்புதமான முறையில் வெளிப்படுத்துகிறது. பவுல் இந்த பண்புகளை மூன்று மாறுபட்ட ஜோடிகளாக முன்வைத்தார்: முதலில் எதிர்மறை, பின்னர் நேர்மறை (1 தெச. 2: 3-7). பவுல் தனது செய்தி, முறை மற்றும் நோக்கங்களை பாதுகாக்கிறார்.

C. 1 தெச. 2: 10-12 என்பது 1 தெச 2: 1-9 இன் சுருக்கமாகும்.

D. இந்த அதிகாரம் கிரேக்கப் பதங்கள் எங்கு பிரிக்கப்பட வேண்டும் என்பதில் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் சில குழப்பங்களை பிரதிபலிக்கிறது:
   1. 1 தெச. 2: 6-7.
   2. 1 தெச. 2: 11-12.

E. பவுல் கொரிந்துவில் தனது தற்போதைய நிலைமை மற்றும் யூத எதிர்ப்போடு தனது முதல் அனுபவங்களின் சுருக்கம் பற்றி 1 தெச 2: 14-16-ல் விவரிக்கிறார். இந்த வசனங்கள் யூதர்களைப் பற்றி பவுலின் வலுவான எதிர்மறையான கருத்துக்கள் ஆகும் (ரோமர் 9-11 தவிர).

## சொல் மற்றும் சொற்றொடர் ஆய்வு

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 2:1-12**

**[1]. சகோதரரே, நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது
வீணாயிருக்கவில்லையென்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள். [2]. உங்களுக்குத்
தெரிந்திருக்கிறபடி, முன்னே பிலிப்பிபட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு
நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய
சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள்
தைரியங்கொண்டிருந்தோம். [3]. எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும்
துராசையினாலும் உண்டாகவில்லை, அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை. [4].
சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை
உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள்
இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.
[5]. உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான
வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய்
மாயம்பண்ணவுமில்லை; தேவனே சாட்சி. [6]. நாங்கள் கிறிஸ்துவின்
அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும்,
உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும்
மகிமையை நாங்கள் தேடவில்லை. [7]. உங்களிடத்தில் பட்சமாய்**

நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, [8]. நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம். [9]. சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம். [10]. விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி. [11]. மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று, [12]. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்.

**2: 1 " நீங்களே அறிந்திருக்கிறீர்கள். "** பவுல் தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களுடனான அனுபவங்களில் அடிக்கடி இந்த சொற்றொடரை இந்த புத்தகத்தின் சிறப்பியல்பாக குறிப்பிட்டார்.

| | |
|---|---|
| **NASB, NKJV, NRSV** | **"நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லையென்று"** |
| **TEV** | **"நாங்கள் உங்களிடத்தில் வருகையளித்தது தோல்வியாயிருக்கவில்லையென்று"** |
| **NJB** | **"நாங்கள் உங்களிடத்தில் வருகையளித்தது பயனற்றதாக நிரூபிக்கவில்லையென்று"** |

இது சாதாரணநிலை செய்வினை முற்று. இது (1) "பலனற்றது" அல்ல (ஒ.பா. 1 கொரி. 15: 10,58) அல்லது (2) "வெறுங்கை" அல்ல (ஒ.பா. மாற்கு 12: 2). யூதேயாவில் உள்ள சபைகளைப் போலவே கொடூரமான யூத எதிர்ப்பையும் மீறி சபை தொடர்ந்தது, அவர்கள் யூதர்களின் கோபத்தை அனுபவித்தனர் (ஒ.பா.1 தெச. 2:13-16).

**2:2 "இதிருந்தும்"** இது ஒரு பலத்த எதிர்மறையான இணைப்பு வசனமாகும் (alla, ஒ.பா. 1 தெச. 2: 4 [இரண்டு முறை], 7, 8), இது ஒரு மாறுபாட்டைக் குறிக்கிறது.

▣ **"பிலிப்பிபட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு "** பவுல் சுவிசேஷத்திற்காக ஏற்பட்ட தனது சொந்த துன்பங்களை விவரிக்கத் தொடங்குகிறார் (ஒ.பா. அப்போஸ்தலர் 16: 11-40 மற்றும் 1 கொரி. 4: 9-13; 2 கொரி. 4: 8-12; 6: 4-10; 11: 24-27).

| | |
|---|---|
| **NASB** | **"தவறாக நடத்தப்பட்டிருந்தும்"** |
| **NKJV** | **"வெறுக்கத்தக்க விதத்தில் நடத்தப்பட்டிருந்தும்** |
| **NRSV** | **"நிந்தையடைந்திருந்தும்"** |
| **TEV** | **"அவமதிக்கப்பட்டிருந்தும்"** |
| **NJB** | **"மொத்தமாக அவமானப்படுத்தப்படிருந்தும்"** |

இது உடல் மற்றும் உள ரீதியான துஷ்பிரயோகம்.

| | |
|---|---|
| **NASB** | **"தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடம் சொல்ல எங்கள் தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்"** |
| **NKJV** | **"தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்"** |

**NRSV** **"தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்கு அறிவிக்க எங்கள் தேவனுக்குள் எங்களுக்கு தைரியம் இருந்தது"**
**TEV** **"ஆனாலும், அவரிடமிருந்து வரும் சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்ல தேவன் எங்களுக்கு தைரியம் கொடுத்தார்,"**
**NJB** **"எங்கள் தேவன் தான் உங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க எங்களுக்கு தைரியம் கொடுத்தார்"**

"தைரியம்" பின்வருமாறு சிறப்பு தலைப்பபைப் பார்க்கவும்.
"தேவனின் நற்செய்தி" என்ற சொற்றொடரின் பொருள்

1. தேவனைப் பற்றிய நற்செய்தி (ஆறாம் புற வேற்றுமை)
2. தேவனிடமிருந்து வந்த நற்செய்தி (ஆறாம் அக வேற்றுமை ஒ.பா. TEV, JB). இதே சொற்றொடர் 1 தெச 2: 8 மற்றும் 9 ல் மீண்டும் நிகழ்கிறது (ஒ.பா. ரோமர் 15:16; 1 தீமோ. 1:11; 1 பேதுரு 4:17)

**SPECIAL TOPIC: BOLDNESS (*parrhēsia*)**
**சிறப்பு தலைப்பு: தைரியம் (*parrhēsia*)**

இந்த கிரேக்க சொல் "அனைத்தும்" (*pan*) மற்றும் "பேச்சு" (*rhēsis*). ஆகியவற்றின் ஒரு கூட்டு வாக்கியமாகும். பேச்சில் இந்த சுதந்திரம் அல்லது தைரியம் பெரும்பாலும் எதிர்ப்பு அல்லது நிராகரிப்புக்கு இடையே ஒரு தைரியத்தின் அர்த்த விளக்கத்தைக் கொண்டிருக்கிறது (ஒ.பா. யோவான் 7:13; 1 தெச. 2: 2).

யோவானின் எழுத்துக்களில் (13 முறை பயன்படுத்தப்பட்டது) இது பெரும்பாலும் ஒரு பொது பிரகடனத்தைக் குறிக்கிறது (ஒ.பா. யோவான் 18:20, பவுலின் எழுத்துக்களிலும், கொலோ. 2:15). இருப்பினும், சில நேரங்களில் இது "தெளிவாக" என்று பொருள்படும் (ஒ.பா. யோவான் 10:24; 11:14; 16: 25,29).

அப்போஸ்தலர்கள் நடப்படிகளில் அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பற்றிய செய்தியை (தைரியத்துடன்) பேசுகிறார்கள், இயேசு பிதாவைப் பற்றியும் அவருடைய திட்டங்கள் மற்றும் வாக்குத்தங்கள் பற்றியும் பேசினார் (ஒ.பா. அப்போஸ்தலர் 2:29; 4: 13,29,31; 9: 27-28; 13:46; 14: 3; 18:26; 19: 8; 26:26; 28:31). பவுல் தைரியமாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியும் (ஒ.பா. எபே. 6:19; 1 தெச. 2: 2) சுவிசேஷத்தின் படி வாழவும் ஜெபித்தார் (ஒ.பா. பிலி. 1:20).

இந்த தற்போதைய தீய யுகத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க பவுலின் இறுதியியல் நம்பிக்கை அவருக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தது (ஒ.பா. 2 கொரி. 3: 11-12). இயேசுவின் சீஷர்கள் சரியான முறையில் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருந்தது (ஒ.பா. 2 கொரி. 7: 4).

இந்த காலப்பகுதியைக் குறித்து இன்னும் ஒரு அம்சம் உள்ளது. எபிரேயர் புத்தகம், கிறிஸ்துவில், விசுவாசியின் தைரியத்தின் தனித்துவமான அர்த்தத்தில், தேவனை அணுகி அவருடன் பேசுவதற்குப் பயன்படுத்துகிறது (ஒ.பா. எபி. 3: 6; 4:16; 10: 19,35). விசுவாசிகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, குமாரன் மூலமாக பிதாவுடன் நெருங்கிய உறவுக்கு வரவேற்கப்படுகிறார்கள் (ஒ.பா. 2 கொரி. 5:21)!

இது புதிய ஏற்பாட்டில் பல வழிகளில் பயன்படுத்தப்படுகிறது.

1. ஒரு நம்பிக்கை, தைரியம் அல்லது உறுதி சம்பந்தப்பட்டது
    a. மனிதர்கள் (ஒ.பா. அப்போஸ்தலர் 2:29; 4: 13,31; 2 கொரி. 3:12; எபே 6:19)
    b. தேவன் (ஒ.பா. 1 யோவான் 2:28; 3:21; 4:12; 5:14; எபி. 3: 6; 4:16; 10:19)
2. வெளிப்படையாக, தெளிவாக அல்லது தெளிவற்ற முறையில் பேசுவது (ஒ.பா. மாற்கு 8:32; யோவான் 7: 4,13; 10:24; 11:14; 16:25; அப்போஸ்தலர் 28:31)
3. பகிரங்கமாக பேச (ஒ.பா. யோவான் 7:26; 11:54; 18:20)
4. கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் தைரியமாக பிரசங்கிக்க தொடர்புடைய வடிவம் (parrhēsiazomai) பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. அப்போஸ்தலர் 18:26; 19: 8; எபே. 6:20; 1 தெச. 2: 2)
5.

Copyright © 2014 Bible Lessons International

▣ **"வெகு போராட்டத்திற்கு மத்தியில்"** இது கடினமான, கையால் சண்டையிடப்படுவதனை குறிக்கும் ஒரு மெய் வல்லுனர்களின் அல்லது இராணுவச் சொல்லாகும் (ஒ.பா. பிலி. 1:30; கொலோ. 2: 1). இந்த கிரேக்க சொல் ஆங்கிலத்தில் "வேதனை" எனபடுகிறது.

**2: 3**
**NASB, NKJV "போதகம்"**
**NRSV, TEV "முறையீடு"**
**NJB "ஊக்கம்"**

இது *(பராக்லேசிஸ்) (paraklēsis)* எனும் ஒரே மூலச் சொல்லிலிருந்துதான் யோவான் 14:16, 26; 15:26 மற்றும் 16: 7ல் ஆவியானவர்க்கும், 1 யோவான் 2: 1-ல் இயேசுவிற்கும் பயன்படுத்தப்பட்ட *(பராக்லடோஸ்) (paraklētos)* எனும்பதம் தோன்றியுள்ளது. இப்பதம் கிரேக்கத்திலிருந்து "தேற்றரவாளன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**NASB "பிழையிலிருந்து உண்டாகவில்லை"**
**NKJV "வஞ்சகத்திலிருந்து உண்டாகவில்லை"**
**NRSV "வஞ்சகத்திலிருந்து உருவாகவில்லை"**
**TEV "பிழையின் அடிப்படையிலிருந்து இல்லை"**
**NJB "நாங்கள் ஏமாற்றப்பட்டதால்"**

*பிளானஸ் (Planēs)* என்பது "கிரகம்" (planet) என்பதற்கான கிரேக்க வார்த்தையாகும், இது வானத்திலுள்ள ஒளிமூலங்களை (கிரகங்கள், வால் நட்சத்திரங்கள், எரி நட்சத்திரங்கள்) குறிக்கிறது, அவை விண்மீன் தொகுதிகளின் வழக்கமான முறையைப் பின்பற்றவில்லை. இதனால், அவைகள் "அலைந்து திரிபவைகள்" என்று அழைக்கப்படுகின்றனர், இது உருவகமாக விளக்கும்போது பிழையாக அல்லது வஞ்சகமாக உருவாக்கப்பட்டது.

**NASB "தூய்மையற்றதாலும்"**
**NKJV "துராசையினாலும்"**
**NRSV, TEV "தூய்மையற்ற நோக்கங்களாலும்"**
**NJB "ஒழுக்கக்கேடாலும்"**

இந்த சொல் ஒரு பாலியல் சார்ந்த தளர்த்தலைக் குறிக்கிறது (ஒ.பா. 1 தெச. 4: 7; ரோமர் 1:24; கலா. 5:19; எபே 5: 3; கொலோ 3: 5). பாகல் (புறமத) வழிபாடு பெரும்பாலும் பாலியல் செயற்பாடுகளைக் கொண்டது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். கிருபையால் விசுவாசத்தின் மூலம் நீதிமனக்கப்படுதலை தவறாகப் புரிந்துகொண்ட யூத சட்ட வல்லுநர்களால் பவுல் ஒழுக்கமற்ற நடத்தையை ஆதரிப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கலாம்.

**NASB** **"வஞ்சகத்தின் மூலம்"**
**NKJV** **"அது கபடத்தில் இல்லை"**
**NRSV** **"அல்லது தந்திரம்"**
**TEV** **"நாங்கள் யாரையும் ஏமாற்ற முயற்சிக்கவில்லை"**
**JB** **"அல்லது யாரையும் ஏமாற்ற முயற்சிக்க"**

3ம் வசனத்தில் உள்ள மற்ற இரண்டு சொற்கள் பவுலின் நோக்கங்களைப் பற்றி பேசுகின்றன, ஆனால் இந்த சொற்றொடர் தந்திரத்தின் சூழ்நிலையைக் குறிக்கிறது (ஒ.பா. எபே. 4:14). "வஞ்சகம்" என்பது முதலில் "தூண்டிலால் பிடித்தல்" என்றுபி பொருள்படும் (ஒ.பா. மத் 26: 4; மாற்கு 7:22; 14: 1), ஆனால் பின்னர் இலாபத்திற்கான தந்திரம் என்பதற்கான ஒரு உருவகமாக உருவானது (ஒ.பா. 2 கொரி. 4: 2 இது 2 கொரி. 2:17 ஐ பிரதிபலிக்கிறது). பவுல் அடிக்கடி பேராசைக்காக குற்றம் சாட்டப்பட்டார் (ஒ.பா. 1 தெச. 2: 5).

**2: 4 "நாங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்"** இந்த செயற்பாட்டு சாதாரணநிலை முற்றுவினை ஒருஅங்கீகரிக்கப்படும் நோக்குடனான *(dokimazō)* சோதனையின் அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இந்த அர்த்தத்தில் "அங்கீகரி" என்பது பொதுவாக நாணயங்களின் உண்மையான தன்மையை சோதிப்பதாகும். மிஷனரி குழு தேவனால் சோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு வந்தது. சிறப்பு தலைப்பு: 1 தெச 3: 5 இல் சோதனைக்கான கிரேக்க விதிமுறைகள் மற்றும் அவற்றின் குறிப்புகளை காண்க.

▣ **"ஒப்புவிக்கத்தக்கதற்கு"** இது ஒரு இறந்தகால செயற்பாட்டு வினையெச்சம் ஆகும். இந்த சொல் "விசுவாசம்," "நம்புதல்," அல்லது "நம்பிக்கை" என்ற அதே மூலச் சொல்லிருந்து *(pisteuō)* வருகிறது. இதன் அடிப்படை யோசனை எதையாவது இன்னொருவரிடம் ஒப்படைப்பதாகும் (ஒ.பா. 1 கொரி. 9:17; கலா. 2: 7; 1 தீமோ. 1:11; தீத்து 1: 3). விசுவாசிகள் சுவிசேஷத்தின் உக்கிராணக்காரர்கள் ஆவர். (ஒ.பா. 1 கொரி. 4: 1-2; 1 பேதுரு 4:10).

▣ **"எனவே நாங்கள் பேசுகிறோம்,"** இது நிகழ்கால சாதாரணநிலை செய்வினையாகும். விசுவாசிகள் தாங்கள் பெற்ற நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். (ஒ.பா. கொலோ. 4: 2-6; 1 பேதுரு 3:15) தைரியத்துடன் (ஒ.பா. 1 தெச. 2: 2).

▣ **"மனிதர்களைப் பிரியப்படுத்த அல்ல, ஆனால் தேவனுக்கே பிரியமுண்டாக"** (ஒ.பா.1 தெச. 2: 6; கலா. 1:10).

▣ **"எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற"** இது "இதயம்" என்ற எபிரேய பயன்பாட்டை முழு ஆளுமையின் அர்த்தத்தில் பிரதிபலிக்கிறது. நம்முடைய உள்ளார்ந்த எண்ணங்களை தேவன் அறிவார் (ஒ.பா.1 சாமு. 16: 7; சங். 7: 9; 26: 2; 44:21; 139: 1,23; நீதி. 21: 2; எரே. 11: 20; 12: 3; 17:10; லூக்கா 16:15; அப்போஸ்தலர் 1:24; 15: 8; ரோமர் 8:27; வெளி 2:23). சிறப்பு தலைப்பு: இதயம் - கலா 4: 6 இல் காண்க.

**2: 5 "நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை"** இந்த சொல் தவறான உள்ளார்ந்த எண்ணங்களின் கையாளுதலைக் குறிக்கிறது. குறிப்பாக கொரிந்துவில் இருந்த எதிர்ப்பாளர்கள், (பவுல் இந்த கடிதத்தை எழுதியபோது கொரிந்துவில் இருந்தார்), அங்குள்ள யூதர்கள் செய்ததைப் போலவே

தவறான நோக்கங்களைக் பவுல் கொண்டிருந்தார் என பெரும்பாலும் குற்றம் சாட்டப்பட்டார்.

▣ **"பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவுமில்லை"** பவுல் பெரும்பாலும் பேராசைபிடித்தவர் மற்றும் சந்தர்ப்பவாதி என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தார், இது கிரேக்க ஊரூராகப் போகும் போதகர்களின் சிறப்பியல்பு காரணமாக இருக்கலாம் (ஒ.பா. அப்போஸ்தலர் 20:33). இதனால்தான் அவர் இநேரத்தில் ஊழியம் செய்த சபைகளிலிருந்து தொடர்ந்து பணம் பெறமாட்டார். பிற்காலப்பகுதியில் அவர் பிலிப்பு (இரண்டு முறை, ஒ.பா. பிலி. 4:16) மற்றும் தெசலோனிகேய சபையினரிடமிருந்து உதவி பெற்றார்.

▣ **"தேவனே சாட்சி"** பவுல் தேவனை சாட்சியாகப் பயன்படுத்தி சத்தியம் செய்தார் (ஒ.பா. 1 தெச. 2:10; ரோமர் 1: 9; 1 கொரி. 1:23; 11:31; கலா. 1:19; பிலி. 2:25).

**2: 6 "நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களானாலும்"** இவ்வசனம் சீலாவையும், தீமோத்தேயுவையும் உள்ளடக்குகிறது. இந்த வசனத்தின் பரந்த பயன்பாட்டை இது விளக்குகிறது. "அப்போஸ்தலர்கள்" சபையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஆவிக்குரிய வரமாக 1 கொரி. 12:28 மற்றும் எபே. 4:11ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சில உதாரணங்கள்:

1. பர்னபா (ஒ.பா.அப்போஸ்தலர் 14: 4,14)
2. அன்றோனீக்கையும் யூனியாவையும் (ஒ.பா. ரோமர் 16: 6-7)
3. அப்பொல்லோ (ஒ.பா. 1 கொரி. 4: 6)
4. நீதிமானான யாக்கோபு (ஒ.பா. கலா. 1:19)

இவ்வரம் ஊழியத்தின் எந்த அம்சத்துடன் தொடர்புடையது என்பது நிச்சயமற்றது: (1) சபை நிறுவல்; (2) சுவிசேஷம்; (3) பகுதி தலைமைதத்துவம்; அல்லது (4)?. இது தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள் மற்றும் மேய்ப்பர்கள்/ போதகர்கள் எபே. 4:11ன் தொடர்புப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் சுவிசேஷத்தை வெவ்வேறு முக்கியத்துவங்களுடன் அறிவிக்கிறார்கள்.

▣ சில ஆங்கில மொழிபெயர்ப்புகள் இந்த சொற்றொடரை 1 தெச. 2: 6லும் மற்றவர்கள் 1 தெச. 2: 7 லும் கொண்டுள்ளன.

**NASB, 2: 6 "நாங்கள் நம்முடைய அதிகாரத்தை உறுதிப்படுத்தியிருந்தாலும்"**
**NKJV, 2: 6 "நாங்கள் உங்களுக்குப் பாரமாயிருக்கக்கூடியவர்களானாலும்"**
**NRSV, 2: 7 "நாங்கள் உங்களுக்குப் பாரமாயிருக்கக்கூடியவர்களானாலும்"**
**TEV, 2: 7 "நாங்கள் உங்களுக்குப் பாரமாயிருக்கக்க முடியுமானாலும்"**
**JB, 2: 7 "நாங்கள் எங்கள் முழுபாரத்தையும் உங்கள் மீது திணித்திருக்கலாம்"**

சொல்லார்தமாக, இது "பாரத்துடன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் (1) அப்போஸ்தலிக்க அதிகாரம்; (2) அப்போஸ்தலிக்க கணம்; அல்லது (3) நிதி சார்ந்த பதில் நன்மை (ஒ.பா. 1 தெச. 2: 9; 1 தெச. 3: 8; 1 கொரி. 9: 3-14; 2 கொரி. 11: 7-11).

**2: 7 "நாங்கள் உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்"** (1) "கைக்குழந்தைகள்" என்ற சொற்களின் பயன்படுத்தப்பட்ட முறைக்கு இடையே ஒரு கிரேக்க கையெழுத்துப் பிரதியில் வேறுப்பாடுகல் உ ள்ளது. (*nēpios,* ஒ.பா. MSS P[65], א, B, C, D, F, G) மற்றும் (2) " மென்மையான" (*ēpios,* ஒ.பா. MSS א[c], A, C[2], D[2]). அவற்றின் ஆரம்ப எழுத்து மட்டுமே வேறுபட்டது. முழு வசனத்தின் அடிப்படையில் 1வதே சிறந்தது; வசன சூழ்நிலையின் அடிப்படையில் 2 வது சிறந்தது (இது ஒரு வேண்டுமென்றே பிரதிபலிக்கப்பட்ட வேதபாரகர்களின் மாற்றம்). UBS[4] "குழந்தைகள்" என்றும் "B" மதிப்பீடு கிட்டத்தட்ட உறுதி செய்கிறது).

ஒரிகனும் அகஸ்டினும் பவுல் தெசலோனிக்கேயருக்கு குழந்தை மொழியில் பேசினார் என்று நம்பினார்கள், அதனால்தான் அவர்களுக்கு புரிந்து கொள்ள

முடிந்தது. பவுல் 1 தெச 2: 7, 8 மற்றும் 11 ல் ஆவிக்குரிய பெற்றோர் போன்ற மொழியைப் பயன்படுத்துகிறார்.

▣ **"பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல"** இது மூன்றாம் வகுப்பு நிபந்தனை வாக்கியம். வினைச் சொல்லர்த்தம் "சூடாக்கு" என்று பொருள்படும் மற்றும் பொதுவாக தாய் பறவைகள் அவற்றின் குட்டிகளை "வெப்பமயமாக்குவது" எனும் பதத்திற்கு பயன்படுத்தப்பட்டது (ஒ.பா. எபே. 5:29). இது தாய்ப்பால் கொடுப்பதற்கான ஒரு உருவகமாக இருந்தது. பவுல் (ஒ.பா. கலா. 4:19), இயேசுவைப் போலவே (ஒ.பா. மத். 23:37), அவர்கள்மீது அவர் வைத்திருக்கும் அன்பை பெண்ணியல் வசனங்களின் அடிப்படையில் விவரிக்கிறார் (மற்றும் YHWH ஒ.பா. யாத்திராகமம் 19: 4; ஏசா. 66:13; ஓசி. 11: 4; ஆவியானவர் ஒ.பா. ஆதி. 1: 2)

**2:8**

| | |
|---|---|
| **NASB** | **"உங்களிடம் ஒரு வாஞ்சையாய் இருப்பதால்"** |
| **NKJV** | **"எனவே, நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து"** |
| **NRSV** | **"நாங்கள் உங்களை மிகவும் ஆழமாக கவனிப்பதால்"** |
| **TEV** | **"நாங்கள் உங்களிடம் வைத்திருக்கும் அன்பின் காரணமாக"** |
| **JB** | **"நாங்கள் உங்களிடம் அர்ப்பணிப்புடனும் பாதுகாப்பாகவும் இருக்க உணர்ந்தோம்"** |

முழு புதிய ஏற்பாட்டிலும் (*homeiromai*) என்ற சொல் வேறு எங்கும் இல்லை. இது செப்டுவஜின்ட்டில் யோபு 3: 21 ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்க இலக்கியத்தில், இறந்த குழந்தைகளுக்காக ஏங்குகிற பெற்றோருடன் தொடர்புடைய பாசத்தினை காட்டும் ஒரு வலுவான சொல் இதுவாகும்.

▣ **"தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்"** இது ஊழியத்தின் கிரயத்தையும் அப்போஸ்தலரின் அன்பையும் காட்டுகிறது. ஊழியம் என்பது நாம் செய்யும் ஒன்று அல்ல, அது நாம் தான்.

**2:9 "நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும்"** இவை வலுவான ஒத்த சொற்கள் ஆகும் (ஒ.பா.1 தெச. 3: 8 மற்றும் 2 கொரி. 11:27). கிரேக்க சமூகம் உழைப்பை அடிமைகளுக்கு மட்டுமே நியமித்தது. பவுல், யூதராக இருந்ததால், மரியாதைக்குரிய உழைப்பாழியாக இருந்தார். அவர் பெரும்பாலும் அதை ஊக்குவித்தார், குறிப்பாக இந்த தெசலோனிய கடிதத்தில், ஏனென்றால் சபை ஐக்கியத்திலிருந்து சிலர் வேலை செய்வதிலிருந்து விலகிவிட்டனர். அவர்களின் வேலைகள் இரண்டாவது வருகைக்காக காத்திருக்க வேண்டும் என்பதாக இருந்ததால் (ஒ.பா. 2 தெச. 3: 6-15).

▣ **"இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து"** எல்லா ரபிக்களுக்கும் ஒரு வர்த்தகம் அல்லது வாழ்வாதாரம் இருக்க வேண்டியிருந்தது (ஒ.பா. அப்போஸ்தலர் 18: 3; 1 கொரி. 4:12). பவுல் தனது ஊழியத்திற்காக பணத்தை பேராசைகாரரர் என்ற குற்றச்சாட்டுகளால் ஏற்க மாட்டார் (ஒ.பா. 1 தெச. 2: 5).

"இரவும் பகலும்" என்பது பகல் நேரம் தொடங்கும் நேரத்தை யூதர்கள் கணக்கிடுவதை பிரதிபலிக்கிறது (ஆதி. 1: 5,8,13,19,23,21). பவுல் பகலில் கூடாரத் தயாரிப்பிலோ அல்லது தோல் வேலையிலோ வேலை செய்தார், இரவில் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ஊழியத்திற்கு கடின உழைப்பு நிச்சயம் தேவை!

**2:10 "நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி"** பவுலின் மற்றொரு சத்தியப் பிரமாணம் போன்ற ஒரு வெளிப்பாடு, இது அவருடைய கூற்றுகள் மற்றும் செயல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துகிறது. 1 தெச 2: 5 இல் சத்தியப் பிரமாணமாக,

தேவன் ஒரு சாட்சியாகவும் மேலும், தெசலோனிக்கேய விசுவாசிகளும் இருக்கிறார்கள்.

▣ **"விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு"** சபையில் சிலர், சமூகத்தில் அல்லது வெளியாட்கள் அவருடைய நோக்கங்களை கேள்விக்குள்ளாக்கியிருக்க வேண்டும். பவுல் எப்போதும் தனது நோக்கங்களை காக்க வேண்டியிருந்தது.

**SPECIAL TOPIC: BLAMELESS, INNOCENT, GUILTLESS, WITHOUT REPROACH**

**சிறப்பு தலைப்பு: குற்றமற்ற, பாவமறியாத, குற்றமில்லா, நிந்தனை இல்லா**

A ஆரம்ப அறிக்கைகள்

1. இந்த எண்ணக்கரு இறையியல் ரீதியாக மனிதகுலத்தின் மெய் நிலையை விவரிக்கிறது (உதாரணமாக, ஆதியாகமம் 1, ஏதேன் தோட்டம்).
2. பாவமும் கலகத்தனமும் பரிபூரண ஐக்கியத்தின் இந்த நிலையை அழித்துவிட்டன (உதாரணமாக, ஆதியாகமம் 3).
3. மனிதர்கள் (ஆணும் பெண்ணும்) தேவனுடனான கூட்டுறவை மீட்டெடுக்க ஏங்குகிறார்கள், ஏனென்றால் அவர்கள் அவருடைய சாயலிலும் ரூபத்திலும் உருவாக்கப்பட்டிருக்கின்றனர் (உதாரணமாக, ஆதி. 1: 26-27).
4. பாவமுள்ள மனிதகுலத்துடன் தேவன் பல வழிகளில் இடைப்பட்டார்
   a. தெய்வீக தலைவர்கள் (உதாரணமாக, ஆபிரகாம், மோசே, ஏசாயா)
   b. தியாக அமைப்பு (உதாரணமாக, லேவியராகமம் 1-7)
   c. தெய்வீக எடுத்துக்காட்டுகள் (உதாரணமாக, நோவா, யோபு)
5. இறுதியில் தேவன் மேசியாவை வழங்கினார்
   a. தன்னைப் பற்றிய முழு வெளிப்பாடாக (ஒ.பா. யோவான் 1: 1-14; கொலோ. 1: 13-17; எபி. 1: 2-3)
   b. பாவத்திற்கான பரிபூரண பலியாக (ஒ.பா. மாற்கு 10:45; 2 கொரி. 5:21)
6. கிறிஸ்தவர்கள் குற்றமற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்
   a. சட்டப்பூர்வமாக கிறிஸ்துவினால் செய்யப்பட்ட நீதியின் மூலம் (ஒ.பா. ரோமர் 4: 3,6,8,11,22,23,24; யாக்கோபு 2:23)
   b. படிப்படியான ஆவியின் கிரியையின் மூலம் (யோவான் 16: 8-11)
   c. கிறிஸ்தவத்தின் நோக்கம் கிறிஸ்துவைப் போலாகுதல் (ஒ.பா. ரோமர் 8: 28-30; 2 கொரி. 3:18; கலா. 4:19; எபே 1: 4; 4:13; 1 தெச. 3:13; 4: 3; 5:23; 2 தெச. 2:13; தீத்து 2:14; 1 பேதுரு 1:15), இது மெய்யகவே, ஆதாம் ஏவாளின் வீழ்ச்சியின் விளைவால் இழந்த தேவனின் உருவத்தை மீட்டெடுப்பதாகும்.
7. ஏதேன் தோட்டத்தின் பரிபூரண ஐக்கியத்தை மீட்டெடுப்பதே பரலோகமாகும். தேவனின் பிரசன்னத்திலிருந்து (ஒ.பா. வெளி. 21: 2) சுத்திகரிக்கப்பட்ட பூமிக்கு வரும் புதிய ஜெருசலேம் பரலோகமாகும் (ஒ.பா. 2 பேதுரு 3:10). வேதாகமம் அதே கருப்பொருள்களில் தொடங்கி முடிகிறது.
   a. தேவனுடன் நெருக்கமான, தனிப்பட்ட ஐக்கியம்
   b. ஒரு தோட்ட அமைப்பில் (ஆதியாகமம் 1-2 மற்றும் வெளிப்படுத்துதல் 21-22)
   c. தீர்க்கதரிசன அறிக்கையின் மூலம், விலங்குகளின் இருப்பிடம் மற்றும் தோழமை (ஒ.பா. ஏசா. 11: 6-9)

B பழைய ஏற்பாடு

1. பரிபூரணம், குற்றமற்றது, குற்றமில்லா என்ற கருத்தை சுமக்கும் பலவிதமான எபிரேய சொற்கள் உள்ளன, அவை கடுஞ்சிக்கலான எல்லா தொடர்புகளையும் பெயரிடுவதும் காண்பிப்பதும் கடினமாக இருக்கும்.
2. பரிபூரணம், குற்றமற்ற தன்மை அல்லது குற்றமில்லா என்ற கருத்தை சுமக்கும் முக்கிய சொற்கள் (Robert B. Girdlestone, Synonyms of the Old Testament, pp. 94-99ன் கூற்றுப்படி) பின்வருமாறு:
   a.*shalom* (ஷாலோம்) (BDB1022, KB 1532)
   b.*thamam* (தாமம்) (BDB1070, KB 1743)
   c.(*calah* காலாஹ்) (BDB478, KB 476)
3. செப்டுவஜின்ட் (உதாரணமாக, ஆரம்பகால சபையின் வேதாகமம்) இந்த எபிரேய கருத்துக்களை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படும் கொய்ன் கிரேக்க சொற்களாக மொழிபெயர்க்கிறது (கீழே C. ஐப் பார்க்கவும்).
4. முக்கிய எண்ணக்கரு பலியிடப்படும் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.
   a.*amōmos* (அமமோஸ்) (BDB 1071, ஒ.பா. யாத்திராகமம் 29: 1; லேவி. 1: 3,10; 3: 1,6; எண் 6:14)
   b.*amiantos* (அமியான்டோஸ்) மற்றும் *aspilus* (ஆஸ்பிலஸ்) ஆகியவை கலாச்சார அர்த்தங்களைக் கொண்டுள்ளன.

C புதிய ஏற்பாடு

1. சட்ட எண்ணக்கரு
   a.எபிரேய சட்ட கருத்துவேறுபாட்டுக் குழுவின் அர்த்தம் *amōmos* எனும் பதத்தால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (BDB 1071, ஒ.பா. எபே. 5:27; பிலி. 2:15; 1 பேதுரு 1:19)
   b.கிரேக்க சட்ட அர்த்தங்கள் (ஒ.பா. 1 கொரி. 1: 8; கொலோ. 1:22)
2. கிறிஸ்து பாவமற்றவர், குற்றமற்றவர், மாசற்றவர் (*amōmos*, ஒ.பா. எபி. 9:14; 1 பேது. 1:19)
3. கிறிஸ்துவின் சீஷர்கள் அவரைப் பின்பற்ற வேண்டும் (*amōmos*, ஒ.பா. எபே 1: 4; 5:27; பிலி. 2:15; கொலோ. 1:22; 2 பேதுரு 3:14; யூதா 1:24; வெளி 14: 5)
4. இந்த கருத்து சபைத் தலைவர்களிடமும் பயன்படுத்தப்படுகிறது
   a.*anegklētos*, "குற்றஞ்சாட்டப்படாதவர்" (ஒ.பா. 1 தீமோ. 3:10; தீத்து 1: 6-7)
   b.*anepilemptos*, எனும் பதம் "விமர்சனத்திற்கு மேலே" அல்லது "நிந்தைக்கு ஊன்றுகோல் இல்லை" (ஒ.பா. 1 தீமோ. 3: 2; 5: 7; 6:14; தீத்து 2: 8)
5. "மாசில்லாத" (*amiantos*) பாதத்தின் எண்ணக்கரு பயன்படுத்தப்படுகிறது
   a.கிறிஸ்துவே (ஒ.பா. எபி. 7:26)
   b.கிறிஸ்தவனின் சுதந்தரம் (ஒ.பா. 1 பேதுரு 1: 4)
6. "முழுமை" அல்லது "தெளிவு" (*holoklēria*) (ஒ.பா. அப்போஸ்தலர் 3:16; 1 தெச. 5:23; யாக்கோபு 1: 4)
7. "தவறு இல்லாமல்", "குற்றமற்ற மாசில்லாத" என்ற கருத்து *amemptos* எனும் பதத்தால் தெரிவிக்கப்படுகிறது (ஒ.பா. லூக்கா 1: 6; பிலி. 2:15; 3: 6; 1 தெச. 2:10; 3:13; 5:23)
8. "குற்றத்திற்கு உட்பட்டது அல்ல" என்ற கருத்து *amōmētos* எனும் பதத்தால் தெரிவிக்கப்படுகிறது (ஒ.பா. 2 பேதுரு 3:14)
9. "கரைதிரையற்ற," "களங்கமற்ற" என்ற கருத்து பெரும்பாலும் மேற்கண்ட சொற்களில் ஒன்றைக் கொண்ட பந்திகளில் பயன்படுத்தப்படுகிறது (ஒ.பா. 1 தீமோ. 6:14; யாக்கோபு 1:27; 1 பேது. 1:19; 2 பேதுரு. 3:14)

D எபிரேய மற்றும் கிரேக்க மொழிகளில் இந்த கருத்தை தெரிவிப்பதற்க்கு பல சொற்கள் பயன்படுத்தப்பட்டமை அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. தேவன் நம்முடைய தேவையை கிறிஸ்துவின் மூலமாக வழங்கியுள்ளார், இப்போது அவரைப் போல இருக்கும்படி நம்மை அழைக்கிறார்.

விசுவாசிகள் கிறிஸ்துவின் கிரியையால் "சரியான", "நீதியான", "குற்றமற்ற" என்று நிலைநிறுத்தப்படுகிறார்கள். இப்போது விசுவாசிகள் தங்கள் நிலையை தக்க வைத்திருக்க வேண்டும். "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடக்கவேண்டும்" (ஒ.பா. 1 யோவான் 1: 7). "அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடக்கவேண்டும்" (ஒ.பா. எபே 4: 1,17; 5: 2,15). இயேசு தேவனின் சாயலை மீட்டெடுத்தார். நெருங்கிய ஐக்கியம் இப்போது சாத்தியமானது, ஆனால் அவருடைய குமாரன் செய்ததைப் போல, விழுந்த உலகத்திற்கு (அதாவது, தேசங்களுக்கு) தன் குணத்தை பிரதிபலிக்கும் ஒரு மக்கள் கூட்டத்தை தேவன் விரும்புகிறார் என்பதை நினைவில் வையுங்கள். பரிசுத்தத்திற்குக் குறைவான ஒன்றுக்கும் நாம் அழைக்கப்படவில்லை (ஒ.பா. மத் 5: 20,48; எபே. 1: 4; 1 பேது. 1: 13-16). தேவனின் பரிசுத்தம், சட்டப்பூர்வமாக மட்டுமல்ல, நிலைத்திருக்கவும் வேண்டும்.

Copyright © 2014 Bible Lessons International

**2:11 "புத்தியும்"** 1 தெச 2: 3 இல் உள்ள குறிப்பைக் காண்க. பவுலின் பிரசங்க செயல்பாட்டை விவரிக்கும் மூன்று எச்சவினைகளை (அனைத்தும் paraவுடன் தொடங்கி) கவனியுங்கள்: (1) "அறிவுறுத்துதல்" (நிகழ்கால செய்வினை); (2) "ஊக்குவித்தல்" (நிகழ்கால இடைவினை [ (பெயரடை)]) மற்றும் (3) "வேண்டுகோள்" (நிகழ்கால இடைவினை [ (பெயரடை)]).

**2:12 "பாத்திரராய் நடக்கவேண்டுமென்று"** இது நிகழ்கால வினையெச்சம் ஆகும். இந்த உருவகம் நம்முடைய தொடர்ச்சியான வாழ்க்கை முறையை குறிக்கிறது, இது நம்முடைய எஜமானரின் பிரதிபலிப்பைக் கொண்டிருக்க வேண்டும் (ஒ.பா. கொலோ. 1:10; 2: 6; எபே. 2:10; 4: 1,17; 5: 2, 15). 1 தெச 2:12 முடிவில் விசுவாசிகள் பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள், இதன் மூலம் தேவனின் மகிமையை பிரதிபலிக்கிறார்கள்

▣ **"உங்களை அழைத்த"** இந்த சொற்றொடரின் காலங்களில் கிரேக்க கையெழுத்துப் பிரதி வேறுபாடு உள்ளது: (1) கையெழுத்துப் பிரதிகள் א மற்றும் A ஆகியவை கலா 1: 6 போன்ற இறந்தக் காலத்தைக் கொண்டுள்ளன. இது தேவனின் ஆரம்ப அழைப்பை வலியுறுத்துகிறது (cf. கலா. 1: 6; 1 பேதுரு 1:15). (2) கையெழுத்துப் பிரதிகளில் B, D, F, G, H, K, L, மற்றும் P ஆகியவை பரிசுத்தத்திற்கான தேவனின் தொடர்ச்சியான அழைப்பை வலியுறுத்துகின்றன (ஒ.பா. ரோமர் 8: 28-29; கலா. 4:19; எபே. 1: 4). UBS[4] # 2ம் சந்தர்ப்பத்துக்கு "P" மதிப்பீட்டை வழங்குகிறது (கிட்டத்தட்ட உறுதியாக உள்ளது)

அழைக்கும் தேவனுக்கும், தகுதியுள்ளவர்களாக நடக்க வேண்டிய விசுவாசிகளுக்கும் இடையிலான இறையியல் சமநிலையைக் கவனியுங்கள் (ஒ.பா. பிலி. 2: 12-13). வெவ்வேறு பிரிவுகள் ஒரு அம்சத்தில் அல்லது மற்றொன்றில் கவனம் செலுத்துகின்றன (முற்குறிப்பு அல்லது மனித சுதந்திரம்). தேவன் நம்முடன் ஒரு உடன்படிக்கை உறவில் நடந்துகொள்கிறார். அவருடைய அழைப்பு மற்றும் எங்கள் கட்டாய பதில் (ஆரம்ப மற்றும் தொடர்ந்து) இரண்டும் அவசியமாகும்.

**SPECIAL TOPIC: ELECTION/PREDESTINATION AND THE NEED FOR A THEOLOGICAL BALANCE**

## சிறப்பு தலைப்பு: தெரிவு / முற்குறிப்பு மற்றும் ஒரு இறையியல் சமத்துவத்துக்கான தேவை

தெரிந்துகொள்ளல் என்பது ஒரு அற்புதமான உபதேசமாகும். இருப்பினும், இது சாதகவாதத்திற்கான அழைப்பு அல்ல, ஆனால் இது மற்றவர்களின் மீட்பிற்கு வழிமுறையாக இருக்கும் ஒரு முறை, ஒரு கருவி ஆகும்! இந்த சொல் முதன்மையாக பழைய ஏற்பாட்டில் சேவைக்குப் பயன்படுத்தப்பட்டது; இந்த சொல் முதன்மையாக புதிய ஏற்பாட்டில், சேவையினால் வழங்கப்படும் இரட்சிப்புக்காக பயன்படுத்தப்பட்டது. தேவனின் இறையாண்மைக்கும் மனிதகுலத்தின் சுதந்திர விருப்பத்திற்கும் இடையிலான முரண்பாட்டை வேதாகமம் ஒருபோதும் இணக்கவில்லை, ஆனால் அவை இரண்டையும் உறுதிப்படுத்துகிறது! தேவனின் இறையாண்மை தேர்வில் ரோமர் 9 மற்றும் அதற்கான மனிதகுலத்தின் பிரதி பதில் ரோமர் 10 (ஒ.பா. ரோமர் 10: 11,13) வேதாகம நெருக்கடிநிலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

இந்த இறையியல் நெருக்கடிநிலைக்கு ஒரு திறவுகோல் எபேசியர் 1: 4 ல் காணப்படுகிறது. இயேசு தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர், ஆகவே அனைவரும் அவருக்குள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் (கார்ல் பார்த்). இயேசுவே வீழ்ந்த மனிதகுலத்தின் தேவைக்கு தேவனின் "ஆம்" என்ற பதிலாவார் (கார்ல் பார்த்). எபேசியர் 1: 4ன் படி முற்குறிப்பின் நோக்கம் பரலோகம் அல்ல, பரிசுத்தம் (கிறிஸ்தவத்தன்மை) என்று வலியுறுத்துவதன் மூலம் இது தெளிவுபடுத்தப்படுகிறது. நாம் பெரும்பாலும் நற்செய்தியின் நன்மைகளுக்கு ஈர்க்கப்படுகிறோம், பொறுப்புகளை புறக்கணிக்கிறோம்! தேவனின் அழைப்பு (தெரிந்துகொள்ளல்) காலத்திற்கும் நித்தியத்திற்குமானதாகும்!

கோட்பாடுகள் மற்ற சத்தியங்களுடன் தொடர்புடையவைகளாகக் காணப்படும், ஒன்றுகூட, தொடர்பில்லாத சத்தியங்களாக இருக்காது. ஒரு நட்சத்திரத்திரமும், ஒரு விண்மீன் கூட்டமும் இதற்கு ஒரு நல்ல உருவகமாக சொல்லலாம். தேவன் சத்தியத்தை கிழக்கதிய வகைகளில் முன்வைக்கிறார், மேற்கத்திய, வகைகளில் அல்ல. கோட்பாட்டு சத்தியங்களின் பேச்சுவழக்கான (முரண்பாடான) ஜோடிகளால் ஏற்படும் நெருக்கடிநிலைகளை நாம் அகற்றக்கூடாது:

1. முற்குறிப்பும், மனித சுதந்திரமும்
2. விசுவாசிகளின் பாதுகாப்பும், நீடியபொறுமையின் தேவையும்
3. ஜென்ம பாவமும் விருப்பம் சார்ந்த பாவமும்
4. பாவமற்ற தன்மையும் (பரிபூரணவாதம்) பாவம் குறைவாக செய்தலும்
5. ஆரம்ப உடனடி நீதிமாணாக்கப்பட்டாலும் பரிசுத்தமாகலும் எதிர் முற்போக்கான பரிசுத்தமாக்கல்
6. கிறிஸ்தவ சுதந்திரம் மற்றும் கிறிஸ்தவ பொறுப்பு
7. தேவன் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர் எதிர் தேவன் நிலைத்திருபவர்.
8. தேவன் இறுதிவரைக்கும் அறியப்படாதவர் மற்றும் தேவன் வேதத்தில் அறியப்பட்டவர்
9. தேவனுடைய ராஜ்யம் தற்போதையது மற்றும் எதிர்காலத்துக்குரியது.
10. தேவனின் பரிசாக மனந்திரும்புதல் எதிர் மனித உடன்படிக்கைகான அவசியமான பிரதியுத்தரம் மனந்திரும்புதல்
11. இயேசு தெய்வீகமாகவும், இயேசு மனிதராகவும்
12. பிதாவுக்கு சமமான இயேசு மற்றும் பிதாவுக்கு அடிபணிந்தவர்

"உடன்படிக்கை" என்ற இறையியல் கருத்து தேவனின் இறையாண்மையை (அவர் எப்போதும் முன்னதாகவே எடுத்து நிகழ்ச்சி நிரலை அமைத்துக்கொள்கிறார்) மனிதகுலத்திலிருந்து ஆரம்பித்து தொடர்ந்து மனந்திரும்பும் நம்பிக்கையின் பதிலை (ஒ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 3: 16,19; 20.: 21) ஒன்றிணைக்கிறது. வசனங்களை மீள்பரிசோதிப்பதில்கவனம் செலுத்த வேண்டும். முரண்பாட்டின் ஒரு பக்கம் மற்றைய பக்கத்தின் அர்த்தத்தை குறைத்துவிடும். உங்களுக்கு பிடித்த கோட்பாடு அல்லது இறையியல் முறையை மட்டுமே வலியுறுத்துவதில் இதனால் கவனமாக இருங்கள்!

Copyright © 2014 Bible Lessons International

▣ **"தம்முடைய ராஜ்யத்திற்கும்"** பவுல் இந்த வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தவில்லை. இது தேவ ஆளுகை விசுவாசிகளின் இருதயங்களிலும் மனதிலும் உள்ளதைக் குறிக்கிறது, இது ஒரு நாள் பூமியெங்கும் நிறைவுபெறும் (ஒ.பா. மத் 6:10). இது இயேசுவின் படிப்பினை மற்றும் போதனையின் பாரமாகும். இது மனுவுருவாதல் மற்றும் இரண்டாவது வருகை இடையிலான நேரத்தின் பதற்றத்தை "ஏற்கனவே" ஆனால் "இன்னும் இல்லை" எனப் பிரதிபலிக்கிறது. (ஒ.பா. How to Read the Bible For All Its Worth by Fee and Stuart, பக். 131-134).

## SPECIAL TOPIC: KINGDOM OF GOD
## சிறப்பு தலைப்பு: தேவனுடைய இராஜ்யம்

பழைய ஏற்பாட்டில் YHWH இஸ்ரவேலின் ராஜாவாகவும் (ஒ.பா. 1 சாமு. 8: 7; சங். 10:16; 24: 7-9; 29:10; 44: 4; 89:18; 95: 3; ஏசா. 43:15; 44: 6) மற்றும் மேசியா சிறந்த ராஜாவாகவும் என்று எண்ணப்பட்டார். (ஒ.பா. சங். 2: 6; ஏசா. 9: 6-7; 11: 1-5). இயேசு பெத்லகேமில் பிறந்தவுடன் (6-4 கி.மு.) தேவனுடைய இராஜ்யம் புதிய வல்லமையுடனும் மீட்புடனும் மனித வரலாற்றில் நுழைந்தது (புதிய உடன்படிக்கை, ஒ.பா. எரே. 31: 31-34; எசே. 36: 27-36). யோவான் ஸ்நானகன் இராஜ்யம் சமீபமாய் இருப்பதை அறிவித்தார் (ஒ.பா. மத் 3: 2; மாற்கு 1:15). இராஜ்யம் எதிர் காலத்திற்குரியதாக இருந்தபோதிலும் (ஒ.பா. மத் 16:28; 24:14; 26:29; மாற்கு 9: 1; லூக்கா 21:31; 22: 16,18). இயேசு அவருக்குள்ளும் அவருடைய போதனைகளுக்கும் இராஜ்யம் இருக்கிறது என்பதை தெளிவாகக் கற்பித்தார் (ஒ.பா. மத் 4: 17,23; 10: 7; 12:28; லூக்கா 10: 9,11; 11:20; 17:21; 21:31; -32).

சமநோக்கு சுவிசேஷமான மாற்கு மற்றும் லூக்காவில், "தேவனுடைய ராஜ்யம்" என்ற சொற்றொடரைக் காணலாம். இது இயேசுவின் போதனைகளின் பொதுவான தலைப்பு, மனிதர்களின் இருதயங்களில் தேவனின் தற்போதைய ஆட்சியை உள்ளடக்கியது, இது ஒரு நாள் பூமியெங்கும் நிறைவுபெறும். இது மத்தேயு 6:10ல் உள்ள இயேசுவின் ஜெபத்தில் பிரதிபலிக்கிறது. மத்தேயு, யூதர்களுக்கு எழுதுகிறார், தேவனின் பெயரைப் பயன்படுத்தாத சொற்றொடரை விரும்பினார் (அதாவது, பரலோக இராச்சியம்), மாற்கு மற்றும் லூக்கா, புறஜாதியினருக்கு எழுதுகையில், பொதுவான பெயரைப் பயன்படுத்தி, தெய்வத்தின் பெயரைப் பயன்படுத்தினார்கள்.

இது சமநோக்கு சுவிசேஷங்களில் ஒரு முக்கிய சொற்றொடராகும். இயேசுவின் முதல் மற்றும் கடைசி பிரசங்கங்களும், அவருடைய உவமைகளில் பெரும்பாலானவைகளும் இந்த தலைப்பைக் கையாண்டன. இது இப்போது மனித இதயங்களில் தேவனின் ஆட்சியைக் குறிக்கிறது! யோவான் இந்த சொற்றொடரை இரண்டு முறை மட்டுமே பயன்படுத்துகிறார் என்பது ஆச்சரியமாக இருக்கிறது (இயேசுவின் உவமைகளில் ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை). யோவானின் நற்செய்தியில் "நித்திய ஜீவன்" ஒரு முக்கிய உருவகமாகும்.

இந்த சொற்றொடருடனான அழுத்தம் கிறிஸ்துவின் இரண்டு வருகைகளால் ஏற்படுகிறது. பழைய ஏற்பாடு தேவனுடைய மேசியாவின் ஒரு வருகையை மட்டுமே கவனம் செலுத்தியது-ஒரு இராணுவ, நீதியளிக்கும், புகழ்பெற்ற வருகை-ஆனால் புதிய ஏற்பாடு அவர் ஏசாயா 53 இன் துன்பகரமான ஊழியராகவும், சக். 9: 9ல் தாழ்மையான ராஜாவாகவும் முதன்முறையாக வந்தார் என்பதை காட்டுகிறது. இரண்டு யூத யுகங்கள், துன்மார்க்கத்தின் காலம் மற்றும் நீதியின் புதிய காலம், இரண்டும் நிகழும். இயேசு தற்போது விசுவாசிகளின் இருதயங்களில் ஆட்சி செய்கிறார், ஆனால் ஒரு நாள் எல்லா படைப்புகளையும் ஆட்சி செய்வார். பழைய ஏற்பாடு கணித்ததைப் போல அவர் வருவார் (ஒ.பா. வெளிப்படுத்துதல் 19)! (ஒ.பா. Gordon D. Fee and Douglas Stuart's *How to Read The Bible For All Its Worth*, பக். 131-134).

Copyright © 2013 Bible Lessons International

◘ **"மகிமைக்கும்"** கலாத்தியர் 1: 5-ல் முழு குறிப்பையும் காண்க.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 2:13-16**

**13. ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.**
**14. எப்படியெனில், சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படிப் பாடுபட்டார்களோ, அப்படியே நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே**
**பாடுபட்டீர்கள். 15. அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும், தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலைசெய்தவர்களும், எங்களைத் துரத்தினார்கள். அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்கள் அல்ல, எல்லா மனிதர்களுக்கும்**
**விரோதமானவர்கள், 16. புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடைபண்ணுகிறார்கள்; இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்; அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது.**

**2:13 "நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்"** இது நிகழ்கால சாதாரணநிலை செய்வினை ஆகும். இது 1: 2-10ல் குறிப்பிடப்பட்டதை குறிக்கலாம். இது பவுலின் தற்போதைய ஜெப வாழ்க்கை மற்றும் எழுத்து நடையை

பிரதிபலிக்கிறது (ஒ.பா.1 தெச. 1: 2; 5: 17-18). சிறப்புத் தலைப்பைக் காண்க: 1 தெச. 1: 2ல் நன்றிசொல்லுதல்.

▣ **"கேள்விப்பட்டு"** இது ஒரு இறந்தகால செய்நிலை எச்சவினையாகும். இது எங்கள் தனிப்பட்ட பதிலின் அவசியத்தைக் காட்டுகிறது. இங்கே, இது ஒரு செய்தியைக் குறிக்கிறது. யோவான் 1: 12 ல் இது கிறிஸ்துவின் நபரைக் குறிக்கிறது. 1 தெச 4: 1 ல் இது வாழ்க்கை முறையைக் குறிக்கிறது. நற்செய்தி மூன்று முக்கியத்துவங்களை மையமாகக் கொண்டுள்ளது: (1) தனிப்பட்ட உறவு (ஒ.பா. கொலோ. 2: 6), (2) கோட்பாட்டு உண்மை (ஒ.பா. 2 தெச. 3: 6; 1 கொரி. 15: 1-4), மற்றும் (3) வாழ்க்கை முறை கிறிஸ்தவத்தன்மை (ஒ.பா. பிலி .4: 9). விசுவாசி முதிர்ச்சியடைவதற்கு இம்மூன்றுக்கும் பதிலளிக்க வேண்டும்.

"தேவவசனத்தை கேள்விப்பட்டு" என்ற சொற்றொடர் "சுவிசேஷத்தைப் பெற்றமை" என்பதற்கான ஒரு உவமானமாகிறது. ("என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு" யோவான் 5:24).

1. *dechomai* - லூக்கா 8:13; அப்போஸ்தலர் 8:14; 11: 1; 17:11; 1 தெச. 1:16
2. *paralambanō* - 1 தெச. 2:13
3. *paradechomai* - மாற்கு 4:20
4. *apolambanō* - யாக்கோபு 1:21

இதில் அறிவாற்றல் மற்றும் ஒரு தொகுதி சார்ந்த உறுப்புக்கள் இருப்பதைக் கவனியுங்கள்.

புதிய ஏற்பாட்டில் "பெறு" என்று மொழிபெயர்க்கப்பட்ட வினைச்சொல்லுக்கு பல விஷயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

A. எதிர்மறை விஷயங்கள்
   1. ரோ. 8:15 - அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் *(lambanō)*
   2. 1 கொ. 2:14 - ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான் *(apolambanō)*
   3. 1 கொ. 2:12 - நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல் *(lambanō)*
   4. 2 கொ. 6: 1 - தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு *(apolambanō)*
   5. 2 தெச. 2:10 - இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் *(apolambanō)*

B. நேர்மறையான விஷயங்கள்
   1. அப்போஸ்தலர் 1: 8 - பெலனடைந்து *(lambanō)*
   2. அப்போஸ்தலர் 2:33 - பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி...பெற்று *(lambanō)*
   3. அப்போஸ்தலர் 2:38; 8: 15,17,19; 10:47; 19: 2 - பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுங்கள் *(lambanō)*
   4. அப்போஸ்தலர் 10:43; 26:18 - மன்னிப்பைப் பெறுங்கள் *(lambanō)*
   5. ரோ. 5:11 - ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின *(lambanō)*
   6. ரோம. 5:17 - கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் *(lambanō)*
   7. ரோம. 8:15 - புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் *(lambanō)*
   8. கலா. 3:14 - ஆவியைக்குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் *(lambanō)*
   9. கொலோ 2: 6 - கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே *(paralambanō)*
   10. எபி. 10:36 - வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு *(komizō)*
   11. எபி. 11:18 - வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் *(anadechomai)*
   12. எபி. 12:28 - அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய *(paralambanō)*
   13. யாக்கோபு 1:21 - உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். *(apolambanō)*

14. 1 பேது. 5: 4 - மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் *(komizō)*
15. 1 யோவான் 2:27 - பெற்ற அபிஷேகம் *(lambanō)*
16. ஆஹா, சுவிசேஷத்துடன் என்ன அற்புதமான விஷயங்கள் வருகின்றன!

▣ **"கேள்விப்பட்டு... ஏற்றுக்கொண்டபோது"** இந்த ஒத்த சொற்கள் தெய்வீக நற்செய்தியின் அழைப்பிற்கு மனிதனின் பிரதியீட்டுபதிலின் அவசியத்தை விவரிக்கின்றன! வீழ்ந்த மனிதகுலம் மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும் (ஒ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 3: 16,19; 20:21), தொடர்ந்து மனந்திரும்பவும், நம்பவும், சுவிசேஷத்தை வாழவும் வேண்டும்.

முந்தைய சொல் யோவான் 1: 12 ல் காணப்படும் ஒரு கூட்டுச் சொல்லாகும். பிந்தையது ஒருவரை விருந்தினராக வரவேற்பதாகும். இந்த சூழல் அமைவில், ஒருவர் சுவிசேஷத்தை வரவேற்க வேண்டும் எனப்படுகிறது. நற்செய்தியை ஒரு நபர் மற்றும் ஒரு செய்தியாக புதிய ஏற்பாடு விவரிக்கின்றது.

▣ **"தேவவசனத்தை"** பவுலின் பிரசங்கம் (நற்செய்தியின் செய்தி) தேவனால் அருளப்பட்ட ஒரு வெளிப்பாடாகும் (ஒ.பா. 2 தீமோ. 3: 15-17; 1 பேது. 1: 23-25; 2 பேது. 1: 20-21; 3: 15-16). இங்கே இது வேதாகமத்தைக் குறிக்கவில்லை, மாறாக அப்போஸ்தலிக்க பிரகடனம் மற்றும் போதனைகளையே குறிப்பிடுகின்றது. இயேசுவின் வார்த்தைகள் மற்றும் கிரியைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியை மற்றும் அப்போஸ்தலரின் செய்தியை மட்டுமே புதிய ஏற்பாடு பதிவு செய்கிறது.

| | |
|---|---|
| **NASB** | **"தேவவசனம், இது விசுவாசிக்கும் உங்களிடம் கிரியை செய்கிறது"** |
| **NKJV** | **"தேவவசனம், இது நம்புகிற உங்களிடமும் திறம்பட கிரியை செய்கிறது"** |
| **NRSV** | **"தேவவசனம், இது விசுவாசிகிறவர்களிடம் கிரியை செய்கிறது"** |
| **TEV** | **"அது மெய்யாகவே தேவவசனந்தான். ஏனென்றால், விசுவாசிக்கிற உங்களில் தேவன் கிரியை செய்கிறார்"** |
| **NJB** | **"தேவ செய்தி ... இது விசுவாசிக்கும் உங்களிடையே ஒரு ஜீவனுள்ள சக்தியாகும்"** |

இது நிகழ்கால நடுத்தர சாதாரணநிலையாகும் (ஒ.பா. பிலி. 2:13). "கிரியை" என்பது பவுலுக்கு மிகவும் பிடித்த வார்த்தையாகும், இது ஆங்கில அறிவாற்றலின் "உற்சாகம் " தொடர்பான வார்த்தையாகும். விசுவாசிகளை தொடர்ந்து உற்சாகப்படுத்துவதாக பவுல் சுவிசேஷத்தை உருவகப்படுத்தினார்! ஆதியாகமம் 1 மற்றும் ஏசா. 55:11ல் குறிப்பிடப்பட்டதுப் போல, பேசப்படும் வார்த்தையின் வல்லமையைப் பற்றிய பழைய ஏற்பாட்டு புரிதலை இது பிரதிபலிக்கிறது. (மேலும் யோவான் 1: 1).

▣ **"விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே"** இது நிகழ்கால செய்நிலை எச்சவினையாகும். மறுபடியும், தொடர்ச்சியாக விசுவாசத்தில்நிலைத்திருப்பதே முக்கியமாகும்! நற்செய்தி என்பது ஒரு பொருள் (பரலோகத்திற்கான டிக்கெட், காப்பீட்டுக் கொள்கை) அல்ல, மாறாக குமாரன் மூலமாக பிதாவுடன் ஏற்படும் தனிப்பட்ட மற்றும் வளர்ந்து வரும் உறவை குறிக்கின்றது.

**2:14 "சபைகளை"** இது "அழைக்கப்பட்டவர்கள்" என்றுசொல்லார்தமாக மொழிபெயர்க்கப்படுகிறது. செப்டுவஜின்ட்டில், அதே எண்ணத்தோடு "இஸ்ரவேலின் சபை" என்று எழுதப்பட்டது. தேவனின் பழைய ஏற்பாட்டு மக்களின் தொடர்ச்சியாகவே ஆதி சபை தன்னைக் கண்டது. அவர்கள் "தேவனின் சபைகள்" என்று அழைக்கப்படுவதைக் கவனியுங்கள். "கலா. 1: 2 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

▣ **"கிறிஸ்து இயேசுவுக்குள்ளான"** இந்த சொற்றொடர் ஏழாம் வேற்றுமைப் பதமாகும், அதாவது "உள்" அல்லது "சூழப்பட்டு" எனும் வசனங்களுடன்

முடிவடையும் - ஒரு சூழ்நிலை, தண்ணீரில் ஒரு மீன் போன்ற அர்த்தத்தைக் கொண்டது. மிகவும் பொதுவான பவுலின் சொற்பிரயோகமாகும், இது இயேசுவோடு நம்முடைய ஐக்கியத்தைப் பற்றி பேசுகிறது. நாம் வாழ்கிறோம், அசைகிறோம், அவருக்குள் இருக்கிறோம். பவுல் இந்த மாதிரியை பயன்படுத்தியதற்கு ஒரு எடுத்துக்காட்டுகளாக எபே. 1: 3-14: (1) "கிறிஸ்துவுக்குள்" 1: 3,10,12; (2) "அவருக்குள்" 1: 4,7,9,10,13 (இரண்டு முறை); (3) "பிரியமானவருக்குள்" 1: 6.

▣ **"யூதேயா தேசத்தில்"** யூதேயாவில் உள்ள சபைகளைப் போலவே தெசலோனிய சபகளும் யூதர்களின் துன்புறுத்தல்களை அனுபவித்துக்கொண்டிருந்தன (ஒ.பா. மத் 5: 10-12).

▣ **"அப்படியே நீங்களும் பாடுபட்டீர்கள்"** பொதுவாக, ரோமானிய உலகில் கிறிஸ்தவ செய்தியின் எதிர்விளைவு துன்புறுத்தல் ஆகும் (ஒ.பா. 1 பேதுரு 4: 12-16), ஏனெனில் செய்தியின் பிரத்தியேக தன்மையே இதற்கு காரணமாகும் (ஒ.பா. யோவான் 14: 6).

▣ **"உங்கள் சுய ஜனங்களாலே"** சூழலை பார்க்கும்போது, இது புலம்பெயர் யூதர்களால் துன்புறுத்தப்படுவதைக் குறிக்கிறது, இந்நிருபத்தை எழுதும் நேரத்தில் கொரிந்துவில் இருந்த பவுலும் அதே எதிர்ப்பை எதிர்கொண்டார்.

**2:15 "கர்த்தராகிய இயேசுவையும்,...கொலைசெய்தவர்களும்"** யூதர்கள் இயேசுவை உடல் ரீதியாக கொல்லவில்லை, ஆனால் அவருடைய மரணத்திற்கு அவர்கள் தான் காரணம் (ஒ.பா. மத் 21: 33-46; அப்போஸ்தலர் 2:23).

▣ **"தங்கள் தீர்க்கதரிசிகளையும்"** தேவனுடைய மக்கள் தேவனின் செய்தியைக் கேட்க விரும்பவில்லை, எனவே அவர்கள் அவருடைய செய்தித் அறிவித்தவர்களைக் கொன்றார்கள் (ஒ.பா.. மத் 23: 31,37; அப்போஸ்தலர் 7:52).

**SPECIAL TOPIC: OT PROPHECY**

**சிறப்பு தலைப்பு: பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம்**

I அறிமுகம்

A. திறப்பு அறிக்கைகள்

1.தீர்க்கதரிசனத்தை எவ்வாறு மொழிபெயர்ப்பது என்பதில் விசுவாசமுள்ள சமூகம் உடன்படவில்லை. பிற சத்தியங்கள் பல நூற்றாண்டுகளாக ஒரு மரபுவழி நிலைப்பாடு என்று நிறுவப்பட்டுள்ளன, ஆனால் இது அதில் ஒன்றல்ல.

2.பல பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் நன்கு வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிலைகள் உள்ளன

a.அரசாட்சிக்கு முன்

(1) தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படும் நபர்கள்

(a). ஆபிரகாம் - ஆதி 20: 7
(b). மோசே - எண். 12: 6-8; உப. 18:15; 34:10
(c). ஆரோன் - யாத். 7: 1 (மோசேயின் பேச்சாளர்)
(d). மிரியாம் - யாத். 15:20
(e). எல்தாத், மேதாத் - எண். 11: 24-30
(f). தெபோரா - நியா. 4: 4
(g). பெயரிடப்படாத - நியா. 6: 7-10
(h). சாமுவேல் - 1 சாமு. 3:20

(2) தீர்க்கதரிசிகள் ஒரு குழுவாக பற்றிய குறிப்புகள் - உபா. 13:1-5; 18:20-22

(3) தீர்க்கதரிசிகளின் கூட்டம் அல்லது சங்கம் - 1 சாமு. 10: 5-13; 19:20; 1 இரா. 20: 35,41; 22: 6,10-13; 2 இரா. 2: 3,7; 4: 1,38; 5:22; 6: 1, முதலியன.

(4) மேசியா தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டார்- உப. 18:15-18

b.எழுதப்படாத அரசாட்சி (அவர்கள் ராஜாவை குறிப்பிடுகிறார்கள்):

(1) காத் - 1 சாமு. 22: 5; 2 சாமு. 24:11; 1 நாளா. 29:29

(2) நாத்தான் - 2 சாமு. 7: 2; 12:25; 1 இரா. 1:22

(3) அகியா - 1 இரா. 11:29

(4) யெகூ - 1 இரா. 16: 1,7,12

(5) பெயரிடப்படாத - 1 இரா. 18: 4,13; 20: 13,22

(6) எலியா - 1 கிங்ஸ் 18 - 2 இரா. 2

(7) மீகாயா - 1 இரா 22

(8) எலிசா - 2 இரா. 2: 9,12-13

c.மிகச் சிறந்த எழுத்தாக்கங்களின் தீர்க்கதரிசிகள் (அவர்கள் தேசத்தையும் ராஜாவையும் குறிப்பிடுகிறார்கள்): ஏசாயா - மல்கியா (தானியல் தவிர)

B. வேதாகம விதிமுறைகள்

1.. *Ro'eh* = "பார்ப்பவர்" (seer) (BDB 906, KB 1157), 1 சாமு. 9: 9. இந்த குறிப்பு நபி என்ற சொல்லுக்கான மாற்று சொல்லாக காட்டுகிறது. Ro'eh என்பது "பார்க்க" என்ற பொதுவான வார்த்தையிலிருந்து வந்தது. இந்த நபர் தேவனின் வழிகளையும் திட்டங்களையும் புரிந்து கொண்டார், மேலும் ஒரு விஷயத்தில் தேவனுடைய சித்தத்தை அறிய ஆலோசனை பெற்றார்.

2. *Hozeh* = "பார்ப்பவர்" (seer) (BDB 302, KB 3011), 2 சாமு. 24:11. இது அடிப்படையில் Ro'eh யின் ஒருமைப் பொருளாகும். இது "பார்ப்பதற்கு" என்ற அரிதான வார்த்தையிலிருந்து. தீர்க்கதரிசிகளைக் குறிக்க (அதாவது, "பார்ப்பதற்கு") எச்சவினை வடிவம் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

3.*Nabi*'= "prophet" (தீர்க்கதரிசி) BDB 611, KB 661), அக்காடியன் மூல வினைச்சொல் நாபு (Nabu) = "அழைக்க" மற்றும் அரபு நாபா (Naba'a) = "அறிவிக்க." பழைய ஏற்பாட்டில் ஒரு தீர்க்கதரிசியை குறிப்பிடத்தக்க மிகவும் பொதுவான சொல் இதுவாகும். இது 300 க்கும் மேற்பட்ட முறை பயன்படுத்தப்படுகிறது. இதன் சரியான சொற்பிறப்பியல் நிச்சயமற்றது, ஆனால் தற்போது "அழைப்பது" சிறந்த தேர்வாகத் தெரிகிறது. மோசேயின் ஆரோன் மூலம் பார்வோனுடனான உறவைப் பற்றியா *YHWH* யின் விவரிப்பிலிருந்து சிறந்த விளக்கம் கிடைக்கக்கூடும் (ஒ.பா. யாத். 4: 10-16; 7: 1; உபா 5: 5). ஒரு தீர்க்கதரிசி என்பது தேவனுக்காக தம் மக்களிடம் பேசுபவர் (ஆமோஸ் 3: 8; எரே. 1: 7,17; எசே. 3: 4).

4.மூன்று சொற்களும் 1 நாளா. 29:29; தில் தீர்க்கதரிசியின் பணிகளில் பயன்படுத்தப்படுகின்றன. சாமுவேல் - *Ro'eh*; நாத்தான் - *Nabi*' 'மற்றும் காத் - *Hozeh*.

5.*'ish ha – 'elohim,* "தேவ மனுஷன்" (Man of God) என்ற சொற்றொடர் தேவனுக்காக பேசுபவருக்கான ஒரு பரந்த பதவி. இது "தீர்க்கதரிசி" என்ற பொருளில் பழைய ஏற்பாட்டில் சுமார் 76 முறை பயன்படுத்தப்படுகிறது.

6."தீர்க்கதரிசி"(prophet) என்ற சொல் கிரேக்க மொழியில் உள்ளது. இது பின்வருவனவற்றிலிருந்து இதிலிருந்து வருகிறது: (1) *pro* = "முன்" அல்லது "காக" மற்றும் (2) *phemi* = "பேசுவதற்கு."

II தீர்க்கதரிசனத்தை வரைவிலக்கணப்படுத்தல்.

A. "தீர்க்கதரிசனம்" என்ற சொல் ஆங்கிலத்தை விட எபிரேய மொழியில் ஒரு பரந்த சொற்பொருளைக் கொண்டிருக்கிறது. வரலாற்றுப் புத்தகங்கள் யோசுவா முதல் இராஜாக்கள் (ரூத் தவிர) வரையான புத்தகங்கள் யூதர்களால் "முன்னாள் தீர்க்கதரிசிகள்" என்று பெயரிடப்பட்டுள்ளன. ஆபிரகாம் (ஆதி. 20: 7; சங். 105: 15) மற்றும் மோசே (உபா. 18:18) இருவரும் தீர்க்கதரிசிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர் (மிரியம், யாத்திராகமம் 15:20). எனவே, கருதப்படும் ஆங்கில வரைவிலக்கணத்தைப் பற்றி எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்!

B. "தீர்க்கதரிசனம் என்பது தெய்வீக அக்கறை, தெய்வீக நோக்கம், தெய்வீக பங்கேற்பு ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே அர்த்தத்தை ஏற்றுக்கொள்ளும் வரலாற்றின் புரிதல் என சட்டபூர்வமாக வரையறுக்கப்படலாம். " *Interpreter's Dictionary of the Bible*, vol. 3, p. 896.

C. "தீர்க்கதரிசி ஒரு தத்துவஞானி அல்லது ஒரு முறையான இறையியலாளர் அல்ல, ஆனால் ஒரு உடன்படிக்கையின் மத்தியஸ்தராக, தேவனுடைய வார்த்தையை அவருடைய மக்களுக்கு வழங்குவதன் மூலம், அவர்களின் நிகழ்காலத்தை எழுப்புதலடைய செய்வதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தை ஒழுங்குப்படுத்தல்," *Prophets and Prophecy, Encyclopaedia Judaica* vol. 13 p. 1152.

III தீர்க்கதரிசனத்தின் நோக்கம்

A. தீர்க்கதரிசனம் என்பது தேவன் தம் மக்களிடம் பேசுவதற்கான ஒரு வழியாகும், அவர்களின் தற்போதைய அமைப்பில் வழிகாட்டுதலையும் அவர்களின் வாழ்க்கையையும் உலக நிகழ்வுகளையும் அவர் கட்டுப்படுத்துகின்றார் என்ற நம்பிக்கையை அளிக்கிறார். அவர்களின் செய்தி அடிப்படையில் ஒன்றுதிரட்டப்பட்டதாகும். இது கண்டிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும், விசுவாசத்தையும் மனந்திரும்புதலையும் ஏற்படுத்துவதற்கும், தன்னைப் பற்றியும் தன்னுடைய திட்டங்களைப் பற்றியும் தேவனுடைய மக்களுக்கு அறிவிப்பதற்கும் ஆகும். அவர்கள் தேவனுடைய மக்களை தேவனின் உடன்படிக்கைகளுக்கு நன்றியுள்ளவர்களாக வைத்திருக்கிறார்கள். ஒரு செய்தியை அறிவிப்பவரை தேவன் தேர்ந்தெடுப்பதை தெளிவாக வெளிப்படுத்த இது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது (உபா. 13: 1-3; 18: 20-22). இது இறுதியில், மேசியாவைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளப்படும்.

B. பெரும்பாலும், தீர்க்கதரிசி தங்கள் வாழ்ந்த நாற்களின் வரலாற்று அல்லது இறையியல் நெருக்கடியை பயன்படுத்தி இதை ஒரு சூழலியல் அமைப்பாகக் காட்டினார். இந்த கடைசி காலப் பார்வையினூடாக வரலாறைப் பார்ப்பது இஸ்ரேலில் தனித்துவமானதும் தெய்வீக தெரிந்துகொள்ளல் மற்றும் உடன்படிக்கை வாக்குறுதிகள் பற்றிய உணர்வும் ஆகும்.

C. தீர்க்கதரிசியின் ஸ்தானம் சமமாக இருப்பதாகவும் (எரே. 18:18) தேவனுடைய சித்தத்தை அறிய ஒரு வழியான பிரதான ஆசாரியரின் ஸ்தானத்தை கைப்பற்றுகிறதாகவும் தெரிகிறது. பூரிம் மற்றும் தும்மிம் தேவனின் செய்தியை அறிவிப்பவரிடமிருந்து ஒரு வாய்மொழி செய்தியாக மாறுகிறது. மல்கியாவுக்குப் பிறகு இஸ்ரேலில் தீர்க்கதரிசியின் பதவியும் மறைந்ததாகத் தெரிகிறது. 400

ஆண்டுகளுக்குப் பிறகு யோவான் ஸ்நானகனுடன் இது மறுபடியும் தோன்றியது. புதிய ஏற்பாட்டின் வரமான "தீர்க்கதரிசனம்" பழைய ஏற்பாட்டுடன் எவ்வாறு தொடர்புடையது என்பது நிச்சயமற்றது. புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் (அப்போஸ்தலர் 11: 27-28; 13: 1; 15:32; 1 கொரி. 12: 10,28-29; 14: 29,32,37; எபே. 4:11) புதிய வெளிப்பாட்டை அல்லது வேதத்தை வெளிப்படுத்துபவர்கள் அல்ல, ஆனால் உடன்படிக்கை சூழ்நிலைகளில் தேவனுடைய சித்தத்தை முன்னறிவிப்பவர்களும் முன்னமே அறிவிப்பாளர்களுமாக இருந்தனர்.

D. தீர்க்கதரிசனம் பிரத்தியேகமாக அல்லது முதன்மையாக இயற்கையில் நடக்கப்போவதை கணிப்பிடுவதல்ல. அவரது ஸ்தானத்தையும் அவரது செய்தியையும் உறுதிப்படுத்த கணிப்பு அல்லது முன்குறித்தல் ஒரு வழியாகும், ஆனால் இது கவனிக்கப்பட வேண்டியதாகும் "பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தில் 2% க்கும் குறைவானது மெசியா குறித்ததாகும். 5% க்கும் குறைவானது புதிய உடன்படிக்கை காலத்தை குறிப்பாக விவரிக்கிறது. 1% க்கும் குறைவானது இன்னும் வரவிருக்கும் நிகழ்வுகளைப் பற்றியது. (Fee and Stuart, *How to Read the Bible for All Its Worth*, p. 166).

E. தீர்க்கதரிசிகள் தேவனை மக்களிடம் பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்கள், ஆசாரியர்கள் மக்களை தேவனிடம் பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்கள். இது ஒரு பொதுவான அறிக்கையாகும். ஆபகூக் போன்ற தேவனிடம் கேள்விகளைக் கேட்ட விதிவிலக்குகள் உள்ளனர்.

F. தீர்க்கதரிசிகளைப் புரிந்துகொள்வது கடினம் என்பதற்கான ஒரு காரணம் என்னவென்றால், அவர்களின் புத்தகங்கள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டன என்பது எங்களுக்குத் தெரியாது. அவை காலவரிசைப்படி இல்லை. அவை கருப்பொருளாகத் தோன்றுகின்றன, ஆனால் எப்போதும் ஒருவர் எதிர்பார்க்கும் விதத்தில் இல்லை. பெரும்பாலும் வெளிப்படையான வரலாற்று அமைப்பு, கால அளவு அல்லதுதீர்க்கதரிசனங்களுக்கு இடையே தெளிவான பிரிவு இல்லை. இந்த புத்தகங்களை பின்வருமாறு செய்வது கடினம்
   1.ஒரே அமர்வில் படிப்பது
   2.தலைப்பு மூலம் கோடிடுவது
   3.ஒவ்வொரு தீர்க்கதரிசனத்திலும் மைய உண்மை அல்லது அதிகாரப்பூர்வ நோக்கத்தை அறிவது

IV தீர்க்கதரிசனத்தின் சிறப்பியல்புகள்

A. பழைய ஏற்பாட்டில் "தீர்க்கதரிசி" மற்றும் "தீர்க்கதரிசனம்" என்ற கருத்தில் ஒரு வளர்ச்சி இருப்பதாகத் தெரிகிறது. ஆரம்பகால இஸ்ரேலில் தீர்க்கதரிசிகளின் ஐக்கியம் ஏற்பட்டது, எலியா அல்லது எலிஷா போன்ற வலுவான தலைமைத்துவ அதிகாரம் கொண்ட தலைவரால் வழிநடத்தப்பட்டது. சில நேரங்களில் "தீர்க்கதரிசிகளின் புத்திரர்" என்ற சொற்றொடர், இந்த குழுவை அடையாளப்படுத்த பயன்படுத்தப்பட்டது (2 இரா 2). தீர்க்கதரிசிகள் மெய்மறந்த நிலைகளால் வகைப்படுத்தப்பட்டனர் (1 சாமு. 10: 10-13; 19: 18-24)

B. இருப்பினும், இந்த காலம் தனிப்பட்ட தீர்க்கதரிசிகளுக்காக விரைந்தது. அந்த தீர்க்கதரிசிகள் (உண்மையான மற்றும் கள்ள) ராஜாவுடன் அடையாளம் கண்டு, அரண்மனையில் (காத், நாத்தான்) வாழ்ந்தனர். லும், சுதந்திரமாக இருந்தவர்களும் இருந்தனர், சில நேரங்களில் இஸ்ரேலிய சமுதாயத்தின் (ஆமோஸ்) நிலைமையுடன் முற்றிலும் தொடர்பில்லாததுமாகவும் இருந்தனர். வற்றில் ஆண், பெண் இருவருமே அடங்குவர் (2 கிலோ 22:14.)

C. தீர்க்கதரிசி பெரும்பாலும் எதிர்காலத்தை வெளிப்படுத்துபவராக இருந்தார், மனிதனின் உடனடி பதிலில் நிபந்தனை விதித்தார்கள். பெரும்பாலும் தீர்க்கதரிசியின் பணி மனிதனின் பிரதிபலிப்பால் பாதிக்கப்படாத அவருடைய படைப்புக்கு தேவனின் உலகளாவிய திட்டத்தை விரிவுபடுத்துவதாகும். ண்டைய கிழக்கேத்தயத்தை அண்மித்த தீர்க்கதரிசிகள் மத்தியில் இந்த இறுதியியல் விளக்கத் திட்டம் தனித்துவமானது. எதிர்காலத்தைக் கணித்தல் மற்றும் உடன்படிக்கை நம்பகத்தன்மை ஆகியவை தீர்க்கதரிசன செய்திகளின் இரட்டை குவியங்கள் ஆகும் (ஒ.பா. Fee and Stuart, p. 150). தீர்க்கதரிசிகள் முதன்மையாக கவனத்தில் ஒருமணப்படுகிறார்கள் என்பதை இது குறிக்கிறது. அவர்கள் வழக்கமாக, ஆனால் பிரத்தியேகமாக அல்ல, தேசத்தை பற்றி உரையாற்ற்றினார்கள்.

D. பெரும்பாலான தீர்க்கதரிசனங்கள் வாய்வழியாக வழங்கப்பட்டன. இது பின்னர் கருப்பொருள், காலவரிசை அல்லது கிழக்கை அன்மித்த இலக்கியத்தின் பிற முறைகள் மூலம் இணைக்கப்பட்டது. இது வாய்வழி என்பதால் அது எழுதப்பட்ட உரைநடை போல கட்டமைக்கப்பட்டதல்ல. இது இந்தப் புத்தகங்களை நேராகப் படிக்க கடினமாக்குகிறது மற்றும் ஒரு குறிப்பிட்ட வரலாற்று அமைப்பு இல்லாமல் புரிந்து கொள்வது கடினமாக்குகிறது.

E. தீர்க்கதரிசிகள் தங்கள் செய்திகளை தெரிவிக்க பல வடிவங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

   1. நீதிமன்றக் காட்சி - தேவன் தம் மக்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்கிறார், பெரும்பாலும் இது விவாகரத்து வழக்கு, YHWH தனது மனைவியை (இஸ்ரேலை) தனது துரோகத்திற்காக விவாகரத்து செய்கிறார் (ஓசியா 4; மீகா 6).
   2. இறுதி சடங்கு - இந்த வகை செய்தியின் சிறப்பான செய்தி மற்றும் அதன் சிறப்பியல்பு "துயரம்" அதை ஒரு சிறப்பு வடிவமாக பிரிக்கிறது (ஏசாயா 5; ஆபகூக் 2).
   3. உடன்படிக்கை ஆசீர்வாத அறிக்கை - உடன்படிக்கையின் நிபந்தனை தன்மை வலியுறுத்தப்படுகிறது மற்றும் விளைவுகள் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் எதிர்காலத்திற்காக உச்சரிக்கப்படுகின்றன (உபாகமம் 27-28).

## V தீர்க்கதரிசனத்தை மொழிபெயர்பதற்கான பயனுள்ள வழிகாட்டுதல்கள்

A. ஒவ்வொரு தீர்க்கதரிசனத்தின் வரலாற்று அமைப்பையும் இலக்கிய சூழலமைவையும் குறிப்பிடுவதன் மூலம் அசல் தீர்க்கதரிசியின் (தொகுப்பாளர்) நோக்கத்தைக் கண்டறிய முடியும். பொதுவாக இது இஸ்ரேல் மோசேயின் உடன்படிக்கையை ஒருவிதத்தில் மீறுவதை உள்ளடக்கும்.

B. முழு தீர்க்கதரிசனத்தையும் படித்து மொழிபெயருங்கள், ஒரு பகுதியை மட்டுமல்ல; உள்ளடக்கத்தைப் போல அதை கோடிடுங்கள். சுற்றியுள்ள தீர்க்கதரிசனங்களுடன் இது எவ்வாறு தொடர்புடையது என்று பாருங்கள். முழு புத்தகத்தையும் கோடிட்டுக் காட்ட முயற்சிக்கவும்.

C. உரையில் ஏதேனும் ஒன்று உங்களை உருவகம் ர்ந்த பயன்பாட்டிற்கு சுட்டிக்காட்டும் வரை பந்தியின் நேரடி விளக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; பின்னர் உருவக மொழியை உரைநடைக்குள் வைக்கவும்.

D. வரலாற்று அமைப்பு மற்றும் இணையான பந்திகளின் வெளிச்சத்தில் குறியீட்டு நடவடிக்கையை பகுப்பாய்வு செய்யுங்கள். இந்த பண்டைய கிழக்கேத்தைய அன்மித்த இலக்கியம் மேற்கத்திய அல்லது நவீன இலக்கியம் அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

E. கணிப்பை கவனமாக நடத்துங்கள்.
1.அவை ஆசிரியரின் காலத்திற்குரியது மட்டுமா?
2.அவை பின்னர் இஸ்ரேலின் வரலாற்றில் நிறைவேற்றப்பட்டதா?
3.அவை இன்னும் எதிர்கால நிகழ்வுகளா?
4.அவர்களுக்கு ஒரு சமகால நிறைவேற்றம் மற்றும் எதிர்கால நிறைவேற்றம் இருக்கிறதா?
5.உங்கள் பதில்களை வழிநடத்த வேதத்தின் ஆசிரியர்களை அணுகவும், நவீன எழுத்தாளர்களை அல்ல.

F. சிறப்பு கவனிப்புக்கள்
1.நிபந்தனை பதில் மூலம் கணிப்பு தகுதி உள்ளதா?
2.தீர்க்கதரிசனம் யாருக்கு உரையாற்றப்படுகிறது (ஏன்) என்பது உறுதியாக இருக்கிறதா?
3.வேதாகம ரீதியாகவும் / அல்லது வரலாற்று ரீதியாகவும் பலதரப்பட்ட விதத்தில் பூர்த்தி செய்யபட வாய்ப்பு உள்ளதா?
4.புதிய ஏற்பாடு ஆசிரியர்களுக்கு அருளப்பட்டதன் படி, மேசியாவை பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் பார்த்திருக்கிறார்கள், அது எங்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் மொழியியல் உருவியம் அல்லது சொற்களை கையாளுவதாகத் தெரிகிறது. எங்களுக்கு அருளப்படாததால், இந்த அணுகுமுறையை அவர்களிடம் விட்டு விடுகிறோம்.

VI பயனுள்ள புத்தகங்கள்

A. *A Guide to Biblical Prophecy* by Carl E. Amending and W. Ward Basque
B. *How to Read the Bible for All Its Worth* by Gordon Fee and Douglas Stuart
C. *My Servants the Prophets* by Edward J. Young
D. *Plowshares and Pruning Hooks: Rethinking the Language of Biblical Prophecy and Apocalyptic* by D. Brent Sandy
E. *New International Dictionary of Old Testament Theology and Exegesis*, vol. 4, pp. 1067-1078
F. *The Language and Imagery of the Bible* by G. B. Caird

Copyright © 2014 Bible Lessons International

**SPECIAL TOPIC: NEW TESTAMENT PROPHECY**
**சிறப்பு தலைப்பு: புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம்**

I YHWH இடமிருந்து அருளப்பட்ட வெளிப்பாடுகளைப் பெறுவதற்கும் பதிவு செய்வதற்கும் ரபாய்களின் அர்த்தத்தைக் கொண்டுள்ள, (ஒ.பா. ப்போஸ்தலர் 3: 18,21); ரோமர் 16:26), இது பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்திற்கு சமமானதல்ல (BDB 611, KB 661; சிறப்பு தலைப்பு: தீர்க்கதரிசனம் [பழைய ஏற்பாடு] ஐப் பார்க்கவும்). தீர்க்கதரிசிகள் மட்டுமே வேதத்தை எழுத முடிந்தது.

A. மோசே ஒரு தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டார் (ஒ.பா. உபா. 18: 15-21).
B. வரலாற்று புத்தகங்கள் (யோசுவா - ராஜாக்கள் [ரூத் தவிர]) "முன்னாள் தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்பட்டன (ஒ.பா. அப்போஸ்தலர் 3:24).
C. தீர்க்கதரிசிகள் தேவனிடமிருந்து வரும் தகவல்களின் ஆதாரமாக பிரதான ஆசாரியரின் இடத்தைப் பதிலீடுசெய்கிறார்கள் (ஒ.பா. ஏசாயா - மல்கியா)

D. எபிரேய அதிகாரப்பூர்வ பட்டியலின் இரண்டாவது பிரிவு "தீர்க்கதரிசிகள்" (ஒ.பா. மத் 5:17; 22:40; லூக்கா 16:16; 24: 25,27; ரோமர் 3:21)

II புதிய ஏற்பாட்டு எண்ணக்கரு பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது.

A. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் மற்றும் அவர்களின் அருளப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது (ஒ.பா. மத் 2:23; 5:12; 11:13; 13:14; ரோமர் 1: 2)

B. ஒருங்கிணைந்த குழுவை விட ஒரு தனிநபருக்கான செய்தியைக் குறிப்பிடுகிறது (அதாவது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் முதன்மையாக இஸ்ரேலுடன் பேசினர்)

C. யோவான் ஸ்நானகன் (ஒ.பா. மத் 11: 9; 14: 5; 21:26; லூக்கா 1:76) மற்றும் இயேசு தேவனுடைய ராஜ்யத்தின் அறிவிப்பாளர்களாகக் குறிப்பிடுகிறார்கள் (ஒ.பா. மத். 13:57; 21: 11,46; லூக்கா 4:24; 7:16; 13:33; 24:19). இயேசு தீர்க்கதரிசிகளை விட பெரியவர் என்றும் கூறினார் (ஒ.பா. மத் 11: 9; 12:41; லூக்கா 7:26).

D. புதிய ஏற்பாட்டில் உள்ள மற்ற தீர்க்கதரிசிகள்.

1. இயேசுவின் ஆரம்பகால வாழ்க்கை லூக்காவின் நற்செய்தியில் பதிவு செய்யப்பட்டுள்ளது (உதாரணமாக, மரியாளின் நினைவுகள்)

a. எலிசபெத் (ஒ.பா. லூக்கா 1: 41-42)

b. சகரியா (ஒ.பா. லூக்கா 1: 67-79)

c. சிமியோன் (ஒ.பா. லூக்கா 2: 25-35)

d. அன்னாள் (ஒ.பா. லூக்கா 2:36)

2. முரண்பாடான கணிப்புகள் (ஒ.பா. கயபாஸ், ஜான் 11:51)

E. சுவிசேஷத்தைப் பறைசாற்றும் ஒருவரைக் குறிப்பிடுவது (1 கொரி. 12: 28-29; எபே 4:11-ல் வரங்களை அறிவிக்கும் பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ளது)

F. சபையில் கிரியை செய்யும் வரங்களை குறிப்பிடுவது (ஒ.பா. மத் 23:34; அப்போஸ்தலர் 13: 1; 15:32; ரோமர் 12: 6; 1 கொரி. 12: 10,28-29; 13: 2; எபே. 4:11). சில நேரங்களில் இது பெண்களைக் குறிப்பிடமுடியும் (ஒ.பா. லூக்கா 2:36; அப்போஸ்தலர் 2:17; 21: 9; 1 கொரி. 11: 4-5).

G. வெளிப்படுத்துதல் புத்தகத்தின் பகுதிகளைக் குறிக்கும் ஜி. (ஒ.பா. வெளி. 1: 3; 22: 7,10,18,19)

III புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள்

A. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் (உதாரணமாக, வேதம்) செய்த அதே அர்த்தத்தில் இவர்கள் அருளப்பட்ட வெளிப்பாட்டைக் கொடுக்கவில்லை. இந்த அறிக்கை சாத்தியமாகும் ஏனென்றால் அப்போஸ்தலர் 6: 7; 13: 8; 14:22; கலா. 1:23; 3:23; 6:10; பிலி. 1:27; யூதா 3,20ல் பயன்படுத்தப்பட்டுள்ள "விசுவாசம்" (உதாரணமாக, நிறைவு செய்யப்பட்ட நற்செய்தியின் உணர்வு) என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதால் ஆகும்.

இந்த எண்ணக்கரு யூதா 3-ல் பயன்படுத்தப்படும் முழு சொற்றொடரிலிருந்தும் தெளிவாகிறது, "விசுவாசம் ஒருமுறையும் அனைவருக்கும் பரிசுத்தவான்களிடம் ஒப்படைக்கப்பட்டது." "அனைவருக்கும் ஒரு முறை" என்ற விசுவாசம் கிறிஸ்தவத்தின் சத்தியங்கள், மூலஉபதேசங்கள், கருத்துக்கள், உலகக் கண்ணோட்ட போதனைகளைக் குறிக்கிறது. ஒருமுறை கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் புதிய ஏற்பாட்டின் எழுத்தாக்கங்களுக்கு இறையியல் ரீதியான அருள்பாட்டை கட்டுப்படுத்துவதற்கான வேதாகம அடிப்படையாகும் மற்றும் பின்னர் அல்லது பிற எழுத்தாக்கங்களை வெளிப்பாடாகக் கருத அனுமதிக்கவில்லை (சிறப்பு தலைப்பு: அருளப்படல் பார்க்கவும்). புதிய ஏற்பாட்டில் பல தெளிவற்ற, நிச்சயமற்ற மற்றும் நடுநிலையானப் பகுதிகள் உள்ளன (சிறப்பு தலைப்பு:

கிழக்கேத்திய இலக்கியம் [வேதாகம முரண்பாடுகள்] ஐப் பார்க்கவும்), ஆனால் விசுவாசிகள் விசுவாசத்திற்கு "தேவைப்படும்" அனைத்தும் விசுவாசத்தால் உறுதிப்படுத்துகிறார்கள் மற்றும் புதிய ஏற்பாட்டில் போதுமான தெளிவுடன் பயிற்சி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த கருத்து "வெளிப்படுத்தும் முக்கோணம்" என்று அழைக்கப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளது.

1. தேவன் தன்னை காலம்-இடம் வரலாற்றில் வெளிப்படுத்தியுள்ளார் (வெளிப்பாடு).
2. அவர் தனது கிரியைகளை ஆவணப்படுத்தவும் விளக்கவும் சில மனித எழுத்தாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளார் (அருளப்பாடு).
3. இந்த எழுத்தாக்கங்களைப் புரிந்துகொள்ள மனிதர்களின் சிந்தையையும் இதயத்தையும் திறக்க அவர் தம்முடைய ஆவியைக் கொடுத்திருக்கிறார், திட்டவட்டமாக இல்லாவிடினும், இரட்சிப்பு மற்றும் திறமையான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு போதுமானதாக இருக்கிறார் (ஒளிர்தல், சிறப்பு தலைப்பு: ஒளிர்தல் பார்க்கவும்). இதன் அம்சம் என்னவென்றால், அருள்பாடு வேதத்தின் எழுத்தாளர்களுக்கு மட்டுமே ஆகும். இதற்கு மேலாக அதிகாரப்பூர்வ எழுத்துக்கள், தரிசனங்கள் அல்லது வெளிப்பாடுகள் எதுவும் இல்லை. வேதாகமத்தின் அதிகாரப்பூர்வ பட்டியல் மூடப்பட்டுள்ளது. தேவனுக்கு சரியான முறையில் பதிலளிக்க வேண்டிய அனைத்து சாத்தியங்களும் எங்களிடம் உள்ளன. நேர்மையான, தெய்வீக விசுவாசிகளின் கருத்து வேறுபாட்டிற்கு எதிராக வேதாகம எழுத்தாளர்களின் ஒப்பந்தத்தில் இந்த சத்தியம் சிறப்பாகக் காணப்படுகிறது. எந்தவொரு நவீன எழுத்தாளருக்கும் அல்லது பேச்சாளருக்கும் வேதாகம எழுத்தாளர்களிடம் இருந்த தெய்வீக தலைமைத்துவ நிலை இல்லை.

B. சில வழிகளில் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைப் போன்றவர்கள்.
   1. எதிர்கால நிகழ்வுகளை முற்குறித்தனர் (ஒ.பா. பவுல், அப்போஸ்தலர் 27:22; அகபு, அப்போஸ்தலர் 11: 27-28; 21: 10-11; பெயரிடப்படாத பிற தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர் 20:23)
   2. நியாயதீர்ப்பை அறிவித்தனர் (ஒ.பா. பவுல், அப்போஸ்தலர் 13:11; 28: 25-28)
   3. ஒரு நிகழ்வை தெளிவாக சித்தரிக்கும் குறியீட்டு செயல்கள் (ஒ.பா. அகபு, அப்போஸ்தலர் 21:11)

C. அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியங்களை சில சமயங்களில் முற்குறிப்பு வழிகளில் அறிவிக்கிறார்கள் (ஒ.பா. அப்போஸ்தலர் 11: 27-28; 20:23; 21: 10-11), ஆனால் இது முதன்மை அவதானிப்பு அல்ல. 1 கொரிந்தியரில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம், அடிப்படையில் நற்செய்தியுடன் தொடர்புகொள்வதாகும் (ஒ.பா. 1 கொரி. 14: 24,39).

D. அவை சமகாலத்தை வெளிப்படுத்த ஆவியின் சமகால வழிமுறையும் மற்றும் ஒவ்வொரு புதிய சூழ்நிலைக்கும், கலாச்சாரத்திற்கும் அல்லது காலத்திற்குமான தேவனின் சத்தியத்தின் நடைமுறை பயன்பாடுகளும் ஆகும் (ஒ.பா. I கொரி. 14: 3).

E. ஆரம்பகால பவுலின் சபைகளில் அவை நடைமுறையாக இருந்தன (ஒ.பா. 1 கொரி 11: 4-5; 12: 28,29; 13: 2,8,9; 14: 1,3,4,5,6,22, 24,29,31,32,37,39; எபே 2:20; 3: 5; 4:11; 1 தெச. 5:20) மற்றும் அவை (Didache) அப்போஸ்தலர்களின் படிப்பினைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன (முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது இரண்டாவது நூற்றாண்டில், தேதி நிச்சயமற்றது) மற்றும் வடக்கு ஆப்பிரிக்காவில் இரண்டாவது மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளின் மொன்டானிசத்தில் காணப்பட்டது.

IV புதிய ஏற்பாட்டு வரங்கள் நிறுத்தப்பட்டதா?

A. இந்த கேள்விக்கு பதிலளிப்பது மிகவும் கடினமாக உள்ளது. இது வரங்களின் நோக்கத்தை வரையறுப்பதன் மூலம் பிரச்சனைகளை தெளிவுபடுத்த உதவுகிறது. அவை சுவிசேஷத்தின் ஆரம்ப பிரசங்கத்தை உறுதிப்படுத்த வேண்டுமா? அல்லது திருச்சபை தனக்கும் ஒரு விழுந்த உலகத்திற்கும் ஊழியம் செய்வதற்கான வழிகளா?

B. சபையின் வரலாற்றை ஒருவர் கேள்விக்கு பதிலளிக்க பார்க்கிறாரா? அல்லது புதிய ஏற்பாட்டை அறிந்துக் கொள்ள பார்க்கிறாரா? ஆவிக்குரிய வரங்கள் தற்காலிகமானவை என்பதற்கு புதிய ஏற்பாட்டில் எந்த அறிகுறியும் இல்லை. 1 கொரி. 13: 8-13 பயன்படுத்த முயற்சிப்பவர்கள். இந்த சிக்கலை தீர்க்க பந்தியின் அதிகாரப்பூர்வ நோக்கத்தை தவறாக பயன்படுத்துவர்கள், இது அன்பைத் தவிர எல்லாவற்றையும் கடந்து செல்லும் என்று வலியுறுத்துவர்.

C. சபை வரலாற்றில் இருந்தல்ல புதிய ஏற்பாட்டிலிருந்து இதைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன், அதிகாரம், வரன்கள் தொடர்கின்றன என்பதை விசுவாசிகள் உறுதிப்படுத்த வேண்டும். இருப்பினும், கலாச்சாரம் மொழிபெயர்ப்பை பாதிக்கிறது என்று நான் நம்புகிறேன். சில மிக தெளிவான எழுத்தாக்கங்கள் இனி பொருந்தாது (அதாவது, பரிசுத்த முத்தம், முக்காடு அணிந்த பெண்கள், வீடுகளில் சபை கூட்டம் போன்றவை). கலாச்சாரம் நூல்களை பாதிக்கிறது என்றால், ஏன் சபை வரலாறு பாதிக்காது?

D. இது வெறுமனே ஒரு கேள்வியாகும், இதற்கு திட்டவட்டமாக பதிலளிக்க முடியாது. சில விசுவாசிகள் "முற்றுப்பெற்றது" மற்றும் மற்றவர்கள் "முற்றுப்பெறவில்லை" என்று வாதிடுவார்கள். இந்த பகுதியில், பலச் சிக்கல்கள் விளக்குவதில் இருப்பது போலவே, விசுவாசியின் இதயமும் முக்கியமானது. புதிய ஏற்பாட்டில் இது தெளிவற்றம் கலாச்சாரமானதுமாகும். எந்த நூல்கள் கலாச்சாரம் / வரலாற்றால் பாதிக்கப்படுகின்றன மற்றும் எல்லா நேரத்திற்கும் எல்லா கலாச்சாரங்களுக்கும் உள்ளவை என்பதை தீர்மானிக்க முடிகிறது. (ஒ.பா. Fee and Stuart's *How to Read the Bible for All Its Worth*, pp. 14-19 and 69-77). இங்கே ரோம. 14: 1-15: 13 மற்றும் 1 கொரிந்தியர் 8-10ல் காணப்படும் சுதந்திரம் மற்றும் பொறுப்பு ஆகியவை பற்றிய விவாதங்கள் முக்கியமானவை. கேள்விக்கு நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பது இரண்டு வழிகளில் முக்கியமானது.

   1. ஒவ்வொரு விசுவாசியும் அவர்களிடம் இருக்கும் விசுவாசத்தின் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். தேவன் நம் இருதயத்தையும் நோக்கங்களையும் பார்க்கிறார்.
   2. ஒவ்வொரு விசுவாசியும் மற்ற விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தின் புரிதலில் நடக்க அனுமதிக்க வேண்டும். வேதாகம எல்லைக்குள் சகிப்புத்தன்மை இருக்க வேண்டும். தேவன் தன்னைப் போலவே ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

E. சுருக்கமாக, கிறிஸ்தவம் என்பது விசுவாசம் மற்றும் அன்பின் வாழ்க்கையாகும், ஒரு பூரண இறையியல் அல்ல. உறுதியான தகவல் அல்லது மத பரிபூரணத்தை விட மற்றவர்களுடனான நமது உறவை பாதிக்கும் அவருடனான உறவு மிக முக்கியமானது.

Copyright © 2014 Bible Lessons International

▣ **"துரத்தினார்கள்"** இது (1) யாசோனின் சமாதான பிணைப்பு (ஒ.பா. அப்போஸ்தலர் 17: 5-9) அல்லது (2) பவுலின் ஊழியத்தின் பொதுவான அனுபவம் (ஒ.பா. அப்போஸ்தலர்) ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்கலாம். பவுல் தனது அனுபவத்தை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுக்கும், குறிப்பாக இயேசு தனது சமகாலத்தவர்களால் நிராகரிக்கப்பட்டதுக்கு இணையாகக் கண்டார்.

**NASB** **"அவை தேவனுக்குப் பிரியமானவர்கள் அல்ல"**
**NKJV** **"அவர்கள் தேவனைப் பிரியப்படுத்துவதில்லை"**
**NRSV** **"அவர்கள் தேவனை வெறுக்கிறவர்கள்"**
**TEV** **"அவர்கள் தேவனுக்கு எவ்வளவு விரும்பத்தகாதவர்கள்"**
**NJB** **"தேவனைப் பிரியப்படுத்த முடியாத வகையில் செயல்படுகிறார்கள்"**

மோசேயுடனான அவருடைய உடன்படிக்கையை பாதுகாப்பதற்காக யூதர்கள் தங்களுடைய நடவடிக்கைகளை தேவனுடைய சித்தம் என்று நினைத்தார்கள். பொய்யான போதகர்களுக்கு எதிரான விசுவாசத்தை பாதுகாக்கும் தாங்கள் அவருடைய ஊழியர்கள் என்று அவர்கள் நம்பினார்கள் (பவுல் இந்த உணர்வுகளை நன்கு அறிந்திருந்தார்). துன்பகரமான முரண்பாடு என்னவென்றால், அவர்கள் தான் அந்த கள்ளப் போதகர்கள்.

▣ **"மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து"** இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விரோதம் யூதர்களின் தேசிய ஆணவம் மற்றும் தப்பெண்ணத்தில் வேரூன்றிஇருந்தது. அவர்கள் மேசியாவையும் அவருடைய உலகளாவிய நற்செய்தியையும் நிராகரித்தார்கள் (ஒ.பா. ஏசா. 2: 2-4; 45:22; 49: 6; 60: 3; 66: 18,23; யோவான் 3:16; எபே 2: 11-13).

**2:16 "புறஜாதியார்... நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடைபண்ணுகிறார்கள்"** 1 தெசலோனிக்கேயர் எழுதிய நேரத்தில் கொரிந்துவில் பவுலின் அனுபவத்தை இது பிரதிபலிக்கிறது. இந்த வாக்கியங்கள் யூதர்களுக்கு எதிரான பவுலின் வலுவான புகார் (ஒ.பா. ரோமர் 9-11).

▣ **"இரட்சிக்கப்படுவதற்கு"** இது ஒரு இறந்தகால விருப்பநிலை செயப்பாட்டு வினையாகும். தேவன் தம்முடைய சாயலில் படைக்கப்பட்ட எல்லா மனிதர்களையும் இரட்சிக்க விரும்புகிறார் (ஒ.பா. ஆதி. 3:15; 12: 3; யாத்திராகமம் 19: 5- 6; எசே. 18: 23,32; யோனா; யோவான் 3:16; அப்போஸ்தலர் 28:28; எபே 2: 11-2: 13; 1 தீமோ. 2: 4; 2 பேதுரு 3: 9), ஆனால் அவர்கள் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் (ஒ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 3: 16,19; 20:21).

**NASB** **"அவர்கள் எப்போதும் தங்கள் பாவங்களின் அளவை நிறைவாக்குகிறார்கள்"**
**NKJV** **"அவர்கள் செய்த பாவங்களின் அளவை நிறைவாக்க"**
**NRSV** **"அவர்கள் தொடர்ந்து தங்கள் பாவங்களின் அளவை நிறைவாக்குகிறார்கள்"**
**TEV** **"இது அவர்கள் செய்த மொத்த பாவங்களின் முழு நடவடிக்கையாகும்"**
**NJB** **"அவர்கள் பாவங்களை பிரயாட்சிக்க முயற்சிப்பதை அவர்கள் ஒருபோதும் நிறுத்த மாட்டார்கள்"**

பவுல் இந்த சொற்களை (1) பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்திருக்கலாம், ஏனென்றால் இதற்கான சரியான கிரேக்க சொற்றொடர் செப்டுவஜின்டில் ஆதியாகமம் 15:16ல் காணப்படுகிறது; அல்லது (2) மத் 23:32 ல் குறிப்பிடப்பட்டுள்ள கிரியைகள் புத்தகத்துடன் தொடர்புடைய இயேசுவின் வார்த்தைகளிலிருந்து (ஒ.பா.

தானி. 7:10; வெளி. 20:12 மற்றும் சங். 56: 8; 139: 16; ஏசா. 65: 6; மல். 3:16). தேவன் மனிதர்களின் தீய செயல்களைப் பதிவுசெய்கிறார், அவர்கள் அதற்கு கணக்கொப்புவிப்பார்கள் (ஒ.பா. மத் 25-26; வெளி 20: 11-15).

▣ **"அவர்கள்மேல் கோபாக்கினை வந்திருக்கிறது"**இது ஒரு இறந்தகால தெரிநிலை செய்வினையாகும். இவ்வசனம் இஸ்ரேல் மீது வந்த ஆவிக்குரிய குருட்டுத்தன்மை (கடினத்தன்மை) உடன் தொடர்புடையதாகத் தெரிகிறது (மாற்கு 12: 1-12-ன் உவமையில் குறிப்பிடப்பட்டுள்ளது [மத் 21: 33-46 மற்றும் லூக்கா 20: 9-19] ரோமர் 11: 7,25; 2 கொரி. 3:14 வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது). தேவனுடைய கோபம் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரியது (தற்காலிக மற்றும் இறுதியியல் சார்ந்த).

**NASB "அதிகபட்சம்"**

**NKJV "பூரணமாய்"**

**NRSV, TEV,**

**NJB "கடைசியாக"**

இந்த சொற்றொடர் பல வழிகளில் மொழிபெயர்க்கப்படலாம், எனவே உங்கள் ஆங்கில வேதாகமத்தின் சாத்தியமான மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு முழுமையாக புரிந்து கொள்ளுங்கள். அடிப்படையில் அடங்குபாவை

1. திரும்பிப் வாசித்தல் மற்றும் தொகுத்தல்
2. நிறைவை எதிர்நோக்குதல்
3. "முற்றிலும்" என்ற யூத அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது, அவை தேவனின் கோபத்தைப் பற்றிய பயங்கரமான விளக்கங்கள்கொண்டவை.

**NASB (புதுப்பிக்கப்பட்ட) வார்த்தை: 1 தெசலோனிக்கேயர் 2:17-20**

**[17] சகோதரரே, நாங்கள் இருதயத்தின்படி உங்களோடிருந்து, சரீரத்தின்படி கொஞ்சக்காலம் உங்களைவிட்டுப் பிரிந்திருந்தபடியினாலே, உங்கள் முகத்தைப்பார்க்கவேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம்பண்ணினோம். [18] ஆகையால், நாங்கள் உங்களிடத்தில்வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான். [19] எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்; [20] நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்.**

**2:17**
**NASB,NKJV "உங்களைவிட்டுப் பிரிந்திருந்தபடியினாலே"**
**NRSV "உங்களைவிட்டுப் பிரிக்கப்பட்டதன் மூலம் நாங்கள் அனாதைகளாக ஆக்கப்பட்டோம்"**
**TEV "நாங்கள் உங்களிடமிருந்து பிரிக்கப்பட்டோம்"**
**NJB "நாங்கள் உங்களிடமிருந்து பிரிக்கப்பட்டோம்"**

இது ஒரு இறந்த செயற்பாட்டு எச்சவினையாகும். இந்த முழு பத்தியையும் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட மொழிநடை நிரப்புகிறது. இது 1 தெச 2: 7 மற்றும் 11-ன்

பவுலின் பெற்றோர் உருவகங்களைத் தொடர்கிறது. இது ஒரு வெளிப்புற முகவரால் சொல்லார்தமாக "அனாதையாக" உள்ளது.

பவுலின்மீதான குற்றச்சாட்டுகளாக அவர் விரைவாக வெளியேறியதும், நீண்ட காலமாக சமூகமளிக்காததும் அவர் அவர்களை உண்மையிலேயே கவனிப்பதில்லை என்பதைக் காட்டியதாகக் கூறலாம். பவுல் இதை 1 தெச 2: 17-20 மற்றும் 3: 6 ல் மறுக்கிறார்.

▪ **"ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம்பண்ணினோம்"**இந்த சொல் பெரும்பாலும் "காமம்" என்று அதன் இழிவுபடுத்தும் அர்த்தத்தில் வழங்கப்படுகிறது, ஆனால் அரிதாக, இங்கே, இது நேர்மறையாக பயன்படுத்தப்படுகிறது. அவர்களைப் பார்ப்பதற்கான பவுலின் விருப்பம் 1 தெச 3:10 இல் வரைபடமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

**2:18 "நாங்கள் உங்களிடத்தில்வர மனதாயிருந்தோம்"** பவுலின் திட்டங்கள் அனைத்தும் பலனளிக்கவில்லை (ஒ.பா. ரோமர் 1:13; 15:22).

▪ **"சாத்தானோ"**ஒரு தனிப்பட்ட தீய சேனை நம் உலகில் செயலில் உள்ளது, இது தேவனின் திட்டங்களையும் நோக்கங்களையும் முறியடிக்க முயல்கிறது: (1) வீழ்ந்த உலக அமைப்பு, (2) பேய், மற்றும் (3) வீழ்ந்த மனிதநேயம் (ஒ.பா. எபே 2: 2 -3 மற்றும் யாக். 4). பழைய ஏற்பாட்டில் யோபு 1-2 மற்றும் சக். 3 இல் சாத்தானை YHWH இன் ஊழியராகக் காண்கிறோம். புதிய ஏற்பாட்டில் அவர் ஒரு எதிரி (ஒ.பா. ரோமர் .16: 20; 1 கொரி. 5: 5,7; 7: 5; 2 கொரி. 2:11; 11:14; 12: 7) ஆனால் இன்னும் தேவனின் கட்டுப்பாட்டில்தன இருக்கிறது! வேதாகமத்தில் தீமை தீவிரமடைவது பற்றிய நல்ல விவாதத்திற்கு, A.B. Davidson's Old Testament Theology, pp. 300-306 ஐப் படியுங்கள்.

**SPECIAL TOPIC: PERSONAL EVIL**
**சிறப்பு தலைப்பு: தனிப்பட்ட தீமை**

I சாத்தான் மிகவும் மிகவும் கடினமான ஒரு விடயம்

A. பழைய ஏற்பாடு, நன்மைக்கு (தேவனுக்கு) விரோதமான ஒரு பரம எதிரியை வெளிப்படுத்தவில்லை, ஆனால் மனிதகுலத்திற்கு ஒரு மாறுபாடை அளித்து, மனிதகுலத்தின் அநீதியைக் குற்றம் சாட்டும் YHWH இன் ஊழியனாக இருந்தவனே சாத்தன் ஆவான். (A. B. Davidson, *A Theology of the OT*, பக். 300-306).

B. தேவனின் தனிப்பட்ட பரம எதிரி எனும் எண்ணக்கரு பெர்சியா மதத்தின் (சோரஸ்டிய மதம்) செல்வாக்கின் கீழ் வேதாகமங்களுக்கு இடையிலான (பட்டியல்படுத்தப்படாத) இலக்கியங்களில் இருந்து வந்தது. இது, ரபினிக்கல் யூத மதத்தை பெரிதும் பாதித்தது (உதாரணமாக, பாபிலோன், பெர்சியாவில் இஸ்ரேலின் சிறையிருப்பு).

C. புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடுகருப்பொருள்களை வியக்கத்தக்க வகையில்,

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட விதத்தில், வகைகளை உருவாக்குகிறது.

வேதாகம இறையியலின் கண்ணோட்டத்தில் ஒருவர் தீமை பற்றிய ஆய்வை அணுகினால் (ஒவ்வொரு புத்தகமோ அல்லது எழுத்தாளரோ அல்லது வகையோ தனித்தனியாக ஆய்வு செய்யப்பட்டு கோடிட்டுக் காட்டப்படவேண்டும்) பின்னர் தீமை குறித்த மிகவும் மாறுபட்ட கருத்துக்கள் வெளிப்படும்.

எவ்வாறாயினும், வேதகாமமற்ற அல்லது வேதகாமத்திற்கு மிகையான அணுகுமுறையிலிருந்து தீமையைப் ஆய்வுசெய்வதை ஒருவர் அணுகினால், அது புதிய ஏற்பாட்டின் தோற்றத்தின் முன்நிழலான உலக மதங்களின் அல்லது கிழக்கேத்தய மதங்களான பாரசீக இரட்டைவாதம் மற்றும் கிரேக்க-ரோமானிய ஆவிக் கொள்கையாக இருக்கும்.

ஒருவர் வேதத்தின் தெய்வீக அதிகாரத்திற்கு முன்நிபந்தனை செய்திருந்தால் (நான் இருக்கிறேன் போல!), புதிய ஏற்பாட்டின் வளர்ச்சி முற்போக்கான வெளிப்பாடாக பார்க்கப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் யூத நாட்டுப்புறக் கதைகளினதும் அல்லது ஆங்கில இலக்கியங்களினதும் (உதாரணமாக, Dante, Milton) கருத்துகளுக்கு எதிராகப் பாதுகாக்கப்படவேண்டும். இந்த வெளிப்பாட்டின் பகுதியில் நிச்சயமாக மர்மமும் தெளிவற்ற தன்மையும் உள்ளது. தீமையின் அனைத்து அம்சங்களையும், அதன் தோற்றத்தையும் (சிறப்பு தலைப்பு: லூசிபர் பார்க்கவும்), அதன் நோக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டாம் என்று தேவன் தீர்மானித்துள்ளார், ஆனால் பிசாசின் தோல்வியை அவர் வெளிப்படுத்தியுள்ளார்!

I பழைய ஏற்பாட்டில் சாத்தான்

பழைய ஏற்பாட்டில் "சாத்தான்" (BDB 966, KB 1317) அல்லது "குற்றம் சாட்டுபவர்" மூன்று தனித்தனி குழுக்களுடன் தொடர்புடையதாகத் தெரிகிறது.

A. மனிதனை குற்றம் சாட்டுபவர் (1 சாமு. 29: 4; 2 சாமு. 19:22; 1 இரா. 5: 4, 11: 14,23,25; சங். 109: 6,20,29)

B. தேவதூதர்களை குற்றம் சாட்டுபவர் (எண் 22: 22-23; சக். 3: 1)
   1.தேவனின் தூதன் - எண். 22: 22-23
   2.சாத்தான் - 1 நாளா. 21: 1; யோபு 1-2; சக். 3: 1

C. பேய் (ஒருவேளை சாத்தான்) குற்றம் சாட்டுபவன் (1 இரா. 22:21; சக. 13: 2)

வேதாகம இடைநிலை காலத்திற்கு பிறகே ஆதியாகமம் 3ம் அதிகாரத்தின் பாம்பானது சாத்தானுடன் அடையாளம் காணப்பட்ட்டது. (ஒ.பா. ஞானத்தின் புத்தகம் 2: 23-24; II ஏனோக் 31: 3), பின்னர் இது ஒரு ரபாய்க்களின் கருத்தாக மாற்றப்பட்டுள்ளது (ஒ.பா. Sot 9b மற்றும் Sanh. 29a). ஆதியாகமம் 6-ன் "தேவனுடைய குமாரர்கள்" I ஏனோக் 54: 6-ல் உள்ள தீய தேவதூதர்களாக மாற்றப்பட்டுள்ளது. அவை ரபினிக்கல் இறையியலில் தீமையின் தோற்றமாக உருவாக்கப்பட்டது. அதன் இறையியல் துல்லியத்தை உறுதிப்படுத்த இதை நான் இதை குறிப்பிடவில்லை, ஆனால் அதன் வளர்ச்சியைக் காட்டுவதற்காகவே. புதிய ஏற்பாட்டில் இந்த பழைய ஏற்பாட்டு நடவடிக்கைகளை தேவதூதர்களாக தீமை உருவமாகவும் (அதாவது, சாத்தான்) 2 கொரி. 11: 3; வெளி 12: 9 கூறப்படுகின்றன.

பழைய ஏற்டபாட்டிலிருந்து ஆள்தத்துவப்படுத்தப்பட்ட தீமையின் தோற்றத்தை தீர்மானிப்பது கடினம் அல்லது சாத்தியமற்றதாகும் (உங்கள் பார்வையைப் பொறுத்து). இதற்கு ஒரு காரணம் இஸ்ரேலின் பலமான ஏகத்துவவாதமாகும் (ஒ.பா. உபா. 6: 4-6; 1 இரா. 22: 20-22; பிரசங்கி 7:14; ஏசா. 45: 7; ஆமோஸ் 3: 6). அனைத்து காரணங்களும் YHWH க்கு அவருடைய தனித்துவத்தையும் முதன்மையையும் நிரூபிக்க வழங்கப்பட்டது(ஒ.பா. ஏசா. 43:11; 44: 6,8,24; 45: 5-6,14,18,21,22).

தகவல்களின் சாத்தியமான ஆதாரங்கள் பின்வருமாறு (1) யோபு 1-2, அங்கு சாத்தான் "தேவனுடைய குமாரர்களில்" ஒருவன் (உதாரணமாக, தேவதூதர்கள்) அல்லது (2) ஏசாயா 14; எசேக்கியேல் 28, சாத்தானின்

பெருமையை விளக்குவதற்கு கிழக்கேத்தைய மன்னர்களின் (பாபிலோன் மற்றும் தீரு) பெருமை பேசப்படுகிறது (ஒ.பா. 1 தீமோ. 3: 6). இந்த அணுகுமுறையைப் பற்றி எனக்கு கலவையான உணர்வுகள் உள்ளன. எசேக்கியேல், ஏதேன் தோட்டத்தினை உருவகப்படுத்தி சாத்தானை தீருவின் ராஜாவாக மட்டுமல்ல (ஒ.பா. எசே. 28: 12-16), மாறாக எகிப்தின் ராஜாவுக்கு நன்மை தீமைகளை அறிவதற்கான மரமாக (எசேக்கியேல் 31) பயன்படுத்துகிறார். இருப்பினும், ஏசாயா 14, குறிப்பாக 12-14ம் வசனங்களில் , பெருமை மூலமான ஒரு தேவதூத கிளர்ச்சியை விவரிக்கிறது. சாத்தானின் குறிப்பிட்ட தன்மையையும் ஆரம்பத்தையும் தேவன் நமக்கு வெளிப்படுத்த விரும்பினால், இது மிகவும் சாய்ந்த வழி மற்றும் இடம் ஆகும் (சிறப்பு தலைப்பு: லூசிபர் பார்க்கவும்). முறையான இறையியலின் போக்கிலிருந்து நாம் பாதுகாக்க வெவ்வேறு ஏற்பாடுகள், ஆசிரியர்கள், புத்தகங்கள் மற்றும் வகைகளின் சிறிய, தெளிவற்ற பகுதிகளை எடுத்து அவற்றை ஒரு தெய்வீக புதிரின் துண்டுகளாக இணைக்க வேண்டும்.

I புதிய ஏற்பாட்டில் சாத்தான்

ஆல்ஃபிரட் எடர்ஷெய்ம் Alfred Edersheim (*The Life and Times of Jesus the Messiah*, vol. 2, appendices XIII [pp. 748-763] and XVI [pp. 770-776]) பாரசீக இரட்டைவாதம் மற்றும் பிசாசு சம்பந்தப்பட்ட ஊகங்கள் ரபினிக்கல் யூத மதத்தில் அதிகமாக செல்வாக்கு செலுத்தியுள்ளது என்று கூறுகிறது. இந்த பகுதியில் ரபிகளின் எழுத்துக்கள் சத்தியத்திற்கு ஒரு நல்ல ஆதாரமாக இல்லை. இயேசு ஜெப ஆலயத்தின் போதனைகளிலிருந்து முற்றாக விலகினவராக இருந்தார். ரபினிக்கல் கருத்தான தேவதூதர் மத்தியஸ்தத்தினதும் (ஒ.பா. அப்போஸ்தலர் 7:53) மற்றும் எதிர்ப்பினதும் அதாவது மோசேக்கு சினாய் மலையில் நியாயப்பிரமாணத்தை வழங்கியமையிலிருந்து YHWH மற்றும் மனிதகுலத்திற்கான ஒரு பரம-தேவதூதர் எதிரியைக் குறித்த கருத்துக்கான கதவைத் திறந்தது. ஈரானிய இரட்டைவாதத்தில் (ஜோராஸ்ட்ரியனிசம்-Zoroastrianism) இரண்டு உயர் கடவுள்கள் இருந்தனர்.ரபினிக்கல் கருத்தான தேவதூதர் மத்தியஸ்தத்தினதும் (ஒ.பா. அப்போஸ்தலர் 7:53) மற்றும் எதிர்ப்பினதும் அதாவது மோசேக்கு சினாய் மலையில் நியாயப்பிரமாணத்தை வழங்கியமையிலிருந்து YHWH மற்றும் மனிதகுலத்திற்கான ஒரு பரம-தேவதூதர் எதிரியைக் குறித்த கருத்துக்கான கதவைத் திறந்தது. ஈரானிய இரட்டைவாதத்தில் (ஜோராஸ்ட்ரியனிசம்-Zoroastrianism) இரண்டு உயர் கடவுள்கள் இருந்தனர்.

1. அஹுரா மஸ்டா (Ahura Mazda), பின்னர் ஓர்மாஸ்ட் (Ohrmazd) என்று அழைக்கப்பட்டார், அவர் உருவாக்கும் கடவுள், நல்ல கடவுள்
2. அங்க்ரா மைன்யு (Angra Mainyu), பின்னர் அஹ்ரிமான் (Ahriman) என்று அழைக்கப்பட்டார், அழிக்கும் ஆவி, தீய கடவுள்

அவர்கள் பூமியை போர்க்களமாக வைத்து மேலாதிக்கத்திற்காக போராடுகிறார்கள். இந்த இரட்டைவாதம் YHWH மற்றும் சாத்தானின் யூத மட்டுப்படுத்தப்பட்ட இரட்டைவாதமாக வளர்ந்தது.

புதிய ஏற்பாட்டில் தீமையின் வளர்ச்சிப் படியைப் பற்றிய வெளிப்பாடு உள்ளது, ஆனால் ரபீக்கள் கூறுவது போல் விரிவாக இல்லை. இந்த வேறுப்பாட்டுக்கான நல்ல உதாரணம் "பரலோகத்தில் யுத்தம்" எனும் பதத்தில் இருக்கிறது. சாத்தானின் வீழ்ச்சி (பிசாசு) ஒரு தர்க்கரீதியான தேவையாக இருக்கிறது, ஆனால் பிரத்தியேகங்கள் கொடுக்கப்படவில்லை (சிறப்பு தலைப்பு: சாத்தானின் வீழ்ச்சி மற்றும் அவரது தேவதூதர்களைப் பார்க்கவும்). கொடுக்கப்பட்டவை கூட மறைப்பொருள் வகைகளாக வைக்கப்பட்டிருக்கின்றன (ஒ.பா. வெளி. 12: 4,7,12-13). சாத்தான் (பிசாசு)

தோற்கடிக்கப்பட்டு பூமிக்கு நாடுகடத்தப்பட்டாலும், அவன் இன்னும் YHWH இன் ஊழியனாக செயல்படுவான் (ஒ.பா. மத். 4: 1; லூக்கா 22: 31-32; 1 கொரி. 5: 5; 1 தீமோ. 1:20).

இந்த பகுதியில் நமது ஆர்வத்தை நாம் கட்டுப்படுத்த வேண்டும். ஒரு தனிப்பட்ட சக்தியாக சோதனையும் தீமையும் உள்ளது, ஆனால் இன்னும் ஒரே ஒரு தேவன் மற்றும் மனிதகுலம் மட்டுமே அவன் / அவளது தேர்வுகளுக்கு பொறுப்பாக இருக்கின்றனர் . இரட்சிப்பின் முன்னும் பின்னும் ஒரு ஆவிக்குரியப் போர் உள்ளது. வெற்றி என்பது திரித்துவ தேவனின் மூலமாக மட்டுமே வர முடியும். தீமை தோற்கடிக்கப்பட்டு அகற்றப்படும் (நற். வெளி. 20:10)!

Copyright © 2014 Bible Lessons International

▣ **"தடைபண்ணினான்"**இது எதிரிகளின் முன்னேற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் சாலைகள் மற்றும் பாலங்களை அழிக்க பயன்படுத்தப்படும் ஒரு இராணுவச் சொல்லாகும். உண்மையில் ஒரு ஆவிக்குரிய மோதல் உள்ளது (ஒ.பா. எபே. 4:14; 6: 10-18). இது சாத்தான் அல்ல ஒரு உடல் நோய் பிரச்சினையாக இருந்திருக்க முடியும், (ஒ.பா. 2 கொரி. 12). பவுல் தனது வாழ்க்கையை ஆவிக்குரிய மற்றும் சரீரம் என்று பகுத்து பார்த்தார்.

**2:19** புறஜாதியார் மத்தியில் அவர் செய்த ஊழியத்தின் வெற்றியே, பவுலின் அப்போஸ்தத்துவத்தின் உண்மைத்துவத்தின் தன்மையின் அடையாளமாகும். (ஒ.பா. 1 தெச. 2:20).

▣ **"நம்பிக்கை"** கலா 5: 5 இல் சிறப்பு தலைப்பைக் காண்க.

**NASB "இது நீங்களல்லவா"**
**NKJV "இது நீங்களல்லவா"**
**NRSV "இது நீங்கள் அல்லவா"**
**TEV "இது நீங்கள்-நீங்கள், மற்றவர்களை விட குறைவாக இல்லை"**
**NJB "நீங்கள்"**

பவுலின் தெசலோனிக்கேய சபையின் மீதான பாசமும் அன்பும் மற்ற புறஜாதி சபைகளுடன் ஒப்பிடும்போது எவ்வாறு தொடர்புடையது என்பதுதான் இந்த சொற்றொடரின் சிக்கல் ஆகும். இச்சபை எப்படியோ சிறப்புடையவையா? TEV இன் மொழிபெயர்ப்பு "நீங்கள், மற்றவர்களைக் காட்டிலும் குறைவாக இல்லை" என்பது இந்த எண்ணத்தை குறிக்கிறது.

ஒரு விதத்தில், புறஜாதியினருக்கு அப்போஸ்தலராக பவுல் செய்த திறம் வாய்ந்த வேலைக்கு தெசலோனிக்க விசுவாசிகள் ஒரு வல்லமை வாய்ந்த சாட்சியாக இருந்தனர். பவுல் இயேசுவைப் பிரதிபலித்ததுப் போலவே, அவர்கள் பவுலைப் பிரதிபலித்தனர், இது அவர்களின் புதிய இதயம் மற்றும் ஆவியிற்கான வெளிப்புற சான்றாகும். (புதிய உடன்படிக்கை).

▣ **"அவர் வரும்போது?"** "*Parousia*" என்பது "பிரசன்னம்" என்று பொருள்படும் மற்றும் உருவக விரிவாக்கள் பொருளாக "வருகை" என்பதாகும். புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையின் முதல் பயன்பாடு இதுவாகும் (ஒ.பா. 1 தெச. 2:19; 3:13; 4:15; 5:23; 2 தெச. 2: 1,8-9; 1 கொரி. 15:23). இது மதச்சார்பற்ற இலக்கியங்களில் ஒரு இராஜாவின் அரச வருகைக்காக முதல் நூற்றாண்டின் பயன்படுத்தப்பட்டது. இது சபையில் இரண்டாம் வருகைக்கான ஒரு நுட்ப அர்த்தத்தைக் கொண்டிருந்தது. இந்த இயேசுவின் வருகையே 1 & 2 தெசலோனிக்கேயரின் இறையியல் மையமாகும். 1 தெசலோனிக்கேயரின் ஒவ்வொரு அதிகாரமும் இந்த குறிப்பிலேயே முடிகிறது

(ஒ.பா. 1 தெச. 1:10; 2: 19; 3:13; 4: 13-18; 5:23). சிறப்புத் தலைப்பைக் காண்க: 1 தெச 3:13 இல் கிறிஸ்துவின் வருகைக்கான புதிய ஏற்பாட்டு பாதங்கள்.

**SPECIAL TOPIC: THE ANY-MOMENT RETURN OF JESUS VS. THE NOT YET (NT paradox)**
**சிறப்பு தலைப்பு: இயேசுவின் திடீர் மறுவருகை எதிர் வருகையின் தாமதம் (புதிய ஏற்பாட்டு முரண்பாடு)**

A. புதிய ஏற்பாட்டின் இறுதியியல் பகுதிகள் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன நுண்ணறிவை பிரதிபலிக்கின்றன, அவைகள் சமகால நிகழ்வுகளின் மூலம் கடைசிக்கலாத்தை உற்றுநோக்குகின்றன.

B. மத்தேயு 24, மாற்கு 13 மற்றும் லூக்கா 21 ஆகியவை பல கேள்விகளை ஒரே நேரத்தில் கையாள்வதால் அவற்றை விளக்குவது மிகவும் கடினமாக உள்ளது.
   1.தேவாலயம் எப்போது அழிக்கப்படும்?
   2.மேசியா திரும்பி வருவதற்கான அடையாளம் என்ன?
   3.இந்த காலம் எப்போது முடிவடையும் (ஒ.பா. மத் 24: 3)?

C. புதிய ஏற்பாட்டின் இறுதியியல் பகுதிகளின் வகைகள் பொதுவாக முட்வெளிப்பாடுகள் மற்றும் தீர்க்கதரிசன மொழியின் கலவையாகும், இது வேண்டுமென்றே தெளிவற்றதாகவும் அதிக குறியீடுகளாகவும் உள்ளது. (D. Brent Sandy, *Ploswhares and Pruning Hooks: Rethinking the Language of Biblical Prophecy and Apocalyptic*) ஐப் பார்க்கவும்.

D. புதிய ஏற்பாட்டின் பல பகுதிகள் (ஒ.பா. மத்தேயு 24, மாற்கு 13, லூக்கா 17 மற்றும் 21, 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர் மற்றும் வெளிப்படுத்துதல் விசேஷம்) இரண்டாவது வருகையைப் பற்றி பேசுகின்றன. பின்வரும் பகுதிகள் வலியுறுத்துகின்றன:
   1.நிகழ்வின் சரியான நேரம் தெரிவிக்கப்படவில்லை, ஆனால் நிகழ்வு நிச்சயம்
   2.நிகழ்வுகளின் பொதுவான நேரத்தை அறிந்துக்கொள்ளலாம், ஆனால் குறிப்பிட்ட நேரத்தை நாம் அறிய முடியாது
   3.இது திடீரென்று மற்றும் எதிர்பாராத விதமாக ஏற்படும்
   4.நாம் ஜெபத்தோடுகூட, தயாராக, ஒதுக்கப்பட்ட ஊழியங்களுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

E. இதன் இடையே ஒரு இறையியல் முரண்பாடான பிரச்சனை உள்ளது
   1.எந்த நேரமுமான மறுவருகை (ஒ.பா. லூக்கா 12: 40,46; 21:36; மத் 24: 27,44) மற்றும்
   2.உண்மையிலேயே வரலாற்று ரீதியாக சில நிகழ்வுகள் நிகழ வேண்டும் (கீழே F.)

F. இரண்டாம் வருகைக்கு முன்னர் சில நிகழ்வுகள் நிகழும் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது:
   1.நற்செய்தி உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படும் (ஒ.பா. மத் 24:14; மாற்கு 13:10)
   2.பாரிய விசுவாச துரோகம் ஏற்படும் (ஒ.பா. மத் 24: 10-13, 21; 1 தீமோ. 4: 1; 2 தீமோ. 3: 1ff.; 2 தெச. 2: 3)
   3."கேட்டின் மகன்" வெளிப்பாடுவான் (ஒ.பா. தானி. 7: 23-26; 9: 24-27; 2 தெச. 2: 3)
   4.அதை நீக்குபவர் / யார் கட்டுப்படுத்துகிறவர் (ஒ.பா. 2 தெச. 2: 6-7)

5.யூதர்களின் மத்தியில் எழுப்புதலுக்கான நம்பிக்கை (ஒ.பா. சக. 12:10; ரோமர் 11)

G. லூக்கா 17: 26-37 உள்ளவை மாற்குவில் தொடர்புபடவில்லை. இது மத்தேயு 24: 37-44 இல் ஒரு பகுதி சமநோக்கு தொடர்பைக் கொண்டுள்ளது.

H. கிறிஸ்துவின் விரைவிலான மறுவருகை பற்றிய விவாதத்திற்கு, சிறப்பு தலைப்பு: விரைவிலான மறுவருகை பார்க்கவும்

I. தாமதமான மறுவருகை பற்றிய விவாதத்திற்கு, சிறப்பு தலைப்பு: தாமதமான இரண்டாவது வருகையைப் பார்க்கவும்

Copyright © 2014 Bible Lessons International

**2:20**
**NASB, NKJV,**
**NRSV "எங்கள் மகிமை"**
**TEV, NJB "எங்கள் பெருமை"**

இங்கு மகிமை என்ற சொல்லை பெருமை என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தேவனை விவரிக்கப் பயன்படும் இறையியல் மகிமையுடன் தொடர்புடையது அல்ல. (ஒ.பா. 1 தெச. 2:12).

### கலந்துரையாடல் கேள்விகள்

இது ஒரு ஆய்வு வழிகாட்டி வர்ணனையாகும், அதாவது வேதகமத்தைப் பற்றிய உங்கள் சொந்த விளக்கத்திற்கு நீங்களே பொறுப்பு. நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இருக்கும் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். நீங்கள், வேதாகமம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மொழிபெயர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இதை நீங்கள் ஒரு வியாக்கியானவியலாளரிடம் விட்டுவிடக்கூடாது.

புத்தகத்தின் இந்த பகுதியின் முக்கிய பிரச்சினைகள் மூலம் சிந்திக்க உதவும் வகையில் இந்த விவாத கேள்விகள் வழங்கப்படுகின்றன. அவை உறுதியானவை அல்ல, தூண்டக்கூடியவை என்று கருதப்படுகின்றன.

1. பவுலைத் எதிர்த்து யார், ஏன்?
2. பவுல் தனது பிரசங்கத்திற்கான குற்றசாட்டுகளை மறுப்பதில் ஏன் உறுதியாக இருந்தார்?
3. ஏன் பவுல் சுவிசேஷத்திற்கான யூதர்களின் எதிர்ப்பை காண்பிக்கிறார்?
4. 16 வது வசனத்தில் தேவனின் நோக்கங்களுக்காக யூத தேசம் என்பதற்கான அர்த்தம் என்ன?
5. 17 - 20 வசனங்கள் ஏன் மிகவும் உணர்ச்சிவசப்பத்தானவையாக இருந்தன?

Copyright © 2013 Bible Lessons International